# THIRUMARAI AASAAN

**S. Rajanayagam**

**Editor**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 31 Apr 2018 Issue - 4


ஆசிரியர் உரை

## பரம தேசத்தையே விரும்பினார்கள்

**வி**ருப்பம் என்பது எல்லா மனிதர்களுக்குள்ளும் இருக்கின்ற ஒரு பொதுவான குணம். நான் எதையும் எப்பொழுதும் விரும்பினதில்லையென்றோ அல்லது விரும்புவதில்லை யென்றோ ஒருவன் சொன்னால் அதை நாம் எந்த தயக்கமும் இல்லாமல் அப்படியே ஒதுக்கி விடலாம். எப்படியெனில் விருப்பு, வெறுப்பைக் கடந்தவர்களாக யாருமே இப்பூமியில் இல்லை. ஒருவேளை, விருப்பமானது வயதுக்கேற்றபடியும், தரத்திற்குத் தகுந்தபடியும், சூழ்நிலைக்கு உகந்தபடியும் கொஞ்சம் முன்பின் இருக்கலாமேயொழிய சுத்தமாக இல்லையென்ற நிலை யாருக்குள்ளும் இல்லை. இவ்வுலகை மையமாக வைத்து வாழ்பவர்களுக்குள்ளும் விருப்பம் உண்டு. ஆனால், அந்த இரண்டு விருப்பங்களுக்குமிடையே ஒரு பெரிய இடைவெளி இருக்கும். அவ்வளவுதான்.

சரி, நம்முடைய குடியிருப்பு பரலோகம் (பிலி. 3:20) என்று சொல்லும் பவுலடியாருக்குள்ளும் விருப்பம் இருந்தது. ஆம், பிலிப்பியர் 1:23 ல் **தேகத்தைவிட்டுப் பிரிந்து கிறிஸ்துவுடனே கூட இருக்க எனக்கு ஆசையுண்டு; அது அதிக நன்மையாக இருக்கும்**'' என்கிறார். இன்னும் இதே பவுல், கொரிந்தியருக்குச் சொல்லும்போது,..... **இந்த தேகத்தை விட்டுக் குடிபோகவும், கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அநேகமாய் விரும்புகிறோம்.** (2கொரி5:8) என்கிறார். இந்த தேவ மனிதன் ஏன் இப்படி விரும்பியிருக்கிறான் என்பதற்கு, தாவீது ராஜா, ஆவியானவரின் துணை கொண்டு கொடுக்கும் விளக்கத்தைக் கவனியுங்கள். **உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலது பாரிசத்தில் நித்தியப் பேரின்பமும் உண்டு** என்று (சங்.19:11).

தாவீதால் உரைக்கப்பட்டிருக்கும் இந்த மாபெரும் உண்மையை பழைய ஏற்பாட்டுப் பக்தர்கள் மிகச் சிறப்பாக அறிந்து வைத்திருந்துள்ளனர். ஆகவேதான், எபிரெய ஆசிரியர் பரிசுத்த ஆவியானவரின் துணையோடு அவர்களைப் பற்றிய பட்டியலை 11-ம் அதிகாரத்தில் கொடுக்கும்போது அவர்கள் எதை விரும்பினார்கள் என்றும், எதன்மேல் நோக்கமாயிருந்தார்கள் என்றும் எடுத்துக் கூறுகிறார். **அதையல்ல அதிலும் மேன்மையான பரம தேசத்தையே விரும்பினார்கள்.....** என்றும் [11:26] சொல்லப்பட்டிருக்கிறது.

விசுவாசிகளின் பட்டியலை உள்ளடக்கியிருக்கிற எபிரெயர் 11-ம் அதிகாரத்தை நாம் கவனித்தால் அதில் 16 பேர், பெயர் குறிப்பிட்டு சொல்லப்பட்டிருக்கிறார்கள். ஆம், ஆபேல் தொடங்கி சாமுவேல் மட்டும் பேசப்பட்டிருக்கிறார்கள். அந்தப்பட்டியலைக் கொடுத்த ஆவியானவர் பட்டியலின் ஊடே இரண்டு இடங்களில் நிறுத்தி, சம்பந்தப்பட்டவர்கள் பற்றிக் கொஞ்சம் கூடுதலான விளக்கம் கொடுக்கிறார். முதல் இடம், ஆபிரகாமைப் பற்றிச் சொல்லப்படும் சந்தர்ப்பம். இரண்டாவது இடம், மோசேயைப் பற்றிப் பேசப்பட்டிருக்கும் இடம். இப்பொழுது 16 பேருக்கும் அதிகமான நபர்களைக் கொண்ட பட்டியலில் இந்த இரண்டு பேரைப்பற்றிச் சொல்லுமிடங்களில் மாத்திரம் ஏன் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது என்ற கேள்வி இயல்பாகவே நமக்குள் எழுகிறது. இதுபற்றி புரிந்து கொள்வதற்கு இந்நிருபத்தின் பின்னணியைக் கொஞ்சம் தெரிந்து கொள்வது அவசியம்.

எபிரெயர் நிருபமானது, யூதமார்க்கத்திலிருந்து கிறிஸ்தவத்திற்கு வந்து, பிறகு தங்கள் இனத்தாரின் துன்புறுத்துல்களுக்குப் பயந்து திரும்பவும் யூதமார்க்கத்திற்குப் போய்க்கொண்டிருந்த அல்லது போக எண்ணங் கொண்டிருந்தவர்களுக்காக எழுதப்பட்ட நூல். ஆம், யூத கிறிஸ்தவர்களே, நீங்கள் திரும்பிப் போவது தவறு, திரும்பிப் போக வேண்டாம், மாறாக, நாமெல்லாரும் செத்த கிரியைகளுக்கு நீங்கலாகி பூரணராகும்படி கடந்து போவோம் வாருங்கள் என்று அறை கூவல் விடுக்கிறார். [6:1,2] அது மாத்திரமல்ல, நீங்கள் திரும்பிப் போக நினைக்கும் யூத மார்க்கத்தைக் காட்டிலும் கிறிஸ்துவின் மார்க்கம் மேலானது என்று எடுத்துரைப்பதே இந்நூலின் பிரதான நோக்கமாகவும் உள்ளது. ஆகவேதான் கிறிஸ்துவும், கிறிஸ்தவமும் எந்தெந்த வகைகளில் மேலானது என்று இந்நூலில் அடுக்கடுக்காக விவாதிக்கப்பட்டு அதற்கான காரணங்கள் அழகாக எடுத்தியம்பப்பட்டிருக்கிறது.

பொதுவாக, யூதர்களுக்கு, தங்களது முன்னோர்களைப் பற்றிய பெருமையும், தங்களுடைய சரீர வாழ்வு பற்றிய

மேன்மையும் எப்போதும் உண்டு. தங்களை மேன்மையாக நினைக்கச் செய்யும் அக்காரியங்களைப் பற்றித் தெரிந்து கொள்வதில் எப்பொழுதும் அதிக ஆர்வம் காட்டுவர். முற்பிதாக்கள் மற்றும் மோசே போன்றவர்களைப் பற்றி மிக உயரிய மரியாதை இவர்களுக்கு உண்டு. ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்பதில் இவர்கள் அலாதி இன்பம் அடைவர். (3:9,லூக்.3:8,யோவான்8:39).

முற்பிதாக்களில் முதலாமவராகிய ஆபிரகாம் மீதும், பிரமாணங்களின் தந்தையாகிய மோசே மீதும், இவர்களுக்கிருந்த மரியாதை ஆவியானவருக்குத் தெரியாததல்ல. இந்த யதார்த்தத்தை அடிப்படையாக வைத்து, அவர்களுக்குச் சொல்ல வேண்டியதைச் சொல்லும்படியாகவே விசுவாச வீரர்களின் பட்டியலில், இவர்களிருவரைப் பற்றிப் பேசும்போது கூடுதல் விளக்கம் தரப்பட்டுள்ளது. அதன் நோக்கம், உங்கள் ஆபிரகாமும், உங்கள் மோசேயுமே பரம தேசத்தை விரும்பி, இனி வரும் பலன் மேல் நோக்கமாயிருந்திருக்கும் போது, நீங்கள் அதைப் பற்றிக் கவலைப்படாமல் **திரும்பிப் போகப் பார்க்கிறீர்களே** இது எப்படி நியாயமாகும் என்று கேள்வி எழுப்பி, தவறை இடித்துக் காட்டுகிறார். ஆகவேதான், அந்த இரண்டு இடங்களிலும் கூடுதல் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. எப்படி?

சரி, நமக்கு இம்மாதம் தேவைப்படுவது, ஆபிரகாம் பற்றிச் சொல்லப்பட்டிருக்கும் இடத்திலுள்ள முதல் விளக்கப்பகுதி. ஆபிரகாம் மற்றும் சாராள் பற்றி சொல்லப்படுவதற்கு முன்பாகவே விசுவாசத்தினாலே நீதிமான் என்று சாட்சி பெற்ற ஆபேல் பற்றியும் (11:4) விசுவாசத்தினாலே தேவனுக்குப் பிரியமானவன் என்று பெயரெடுத்த ஏனோக்கு பற்றியும் (11:5) விசுவாசத்தி னாலுண்டாகும் நீதிக்கு சுதந்திரவாளியான நோவா பற்றியும் (11:7) பேசப்பட்டிருக்கிறது. இம்மாமனிதர்களோடு ஆபிரகாமும், சாராளும் பேசப்பட்டு அதன் பிறகு தான் இவ்விதம் எழுதப்பட்டுள்ளது. **இவர்களெல்லாரும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல், தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி அணைத்துக்கொண்டு பூமியின் மேல் தங்களை அந்நியரும், பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு விசுவாசத்தோடே மரித்தார்கள். இப்படி அறிக்கையிடுகிறவர்கள் சுயதேசத்தை நாடிப்போகிறோம் என்று தெரியப்படுத்துகிறார்கள். தாங்கள் விட்டு வந்த தேசத்தை நினைத்தார்களானால், அதற்குத் திரும்பிப் போவதற்கு அவர்களுக்குச் சமயம் கிடைத்திருக்குமே. அதையல்ல, அதிலும் மேன்மையான பரம தேசத்தையே விரும்பினார்கள்; ஆகையால் தேவன் அவர்களுடைய தேவனென்னப்பட வெட்கப்படுகிறதில்லை, அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம் பண்ணினாரே** (11:13-16) **என்று.**

இவ்வசனப்பகுதியை நாம் கவனித்தால், அவர்களுடைய தேவனென்னப்பட அவர் வெட்கப்படவில்லையென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆம், பரலோகத்தின் தேவன் தன்னை ஆபிரகாமின் தேவன், ஈசாக்கின் தேவன், யாக்கோபின் தேவன், என்று பல இடங்களில் வெளிப்படுத்துகிறார். (யாத். 3:6) 16–ம் வசனத்தை கூர்ந்து கவனித்தால், தேவன் ஏன் அவர்கள் தேவனென்னப்படுவதற்கு வெட்கப்படவில்லை என்பதற்கான காரணம் பளிச்சென சொல்லப்பட்டிருக்கிறது. அது, அவர்கள் மேன்மையான பரம தேசத்தையே விரும்பினார்கள் என்பது. நாமும் நம்முடைய வாழ்க்கையில் பரம தேசத்தை விரும்புபவர்களாக இருந்தால் தேவன் நம்முடைய தேவனாக இருப்பதோடு. நம்முடைய தேவனென்னப்படுவதற்கு அவர் வெட்கப்படவும் மாட்டார். அப்படியானால், பரம தேசத்திற்கான வாழ்க்கை வாழ நாம் ஒவ்வொருவரும் தயாரா? சொல்லுங்கள்.

I **வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல்........**

பரம தேசத்தை விரும்பிய அம்மாமனிதர்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளும் முதல் பாடம், **அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல், தூரத்திலே அவைகளைக் கண்டு நம்பி அணைத்துக் கொண்டார்கள்** என்பது. ஆபிரகாம் போன்றவர்கள் சரீர வாக்குத்தத்தை அடைந்தார்களா, இல்லையா எனப்பார்த்தால், ஒரு வகையில் அடைந்தார்கள் என்றும் சொல்லலாம். எப்படியெனில், உன் மனைவியாகிய சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான் (ஆதி. 18:10) என்ற வாக்குத்தத்தை அவன் அடைந்தான். ஆனால், அதே நேரத்தில் பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் (ஆதி.12:3) உன் சந்ததியை பூமியின் தூளைப்போலப் பெருகப் பண்ணுவேன் (ஆதி 13:16) என்பன போன்ற வாக்குத்தத்தங்களை அவன் அடையவில்லை.

ஆனால், இப்பகுதியை நாம் கூர்ந்து பார்த்தால், இங்கு சொல்லப்படும் வாக்குத்தத்தங்கள் அடைந்தும் அடையாமலிருக்கிற சரீரப்பிரகாரமான வாக்குத்தத்தங்களாக இல்லாமல், ஆவிக்குரிய வாக்குத்தத்தங்களாகவே தெரிகிறது. எப்படியெனில் எபி.11:10 –ம் வசனம், ஆபிரகாம் **அஸ்திபாரங்களுள்ள நகரத்திற்குக் காத்திருந்தான்** என்று கூறுகிறது. கூடார வாசியான அவன் அஸ்திபாரங்களுள்ள நகரத்திற்குக் காத்திருந்தான் எனில், அந்த அஸ்திபாரங்களுள்ள நகரத்தைப் பற்றிய காரியங்கள் ஏதோ ஒருவகையில் அவனுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்றே நமக்குத் திட்டமாய்த் தெரிகிறது. நமக்கு கிடைத்திருக்கும் பழைய ஏற்பாட்டில் அவைகளை நாம் காண முடியாவிட்டாலும், அவர்கள் புரிந்து கொள்ளும்படியான அளவில் அது வெளிப்படுத்தப்பட்டிருக்கவே வேண்டும்.

ஆகவே தான், அவர்களால் தூரத்திலே அவைகளைக் கண்டு நம்பி அணைத்துக் கொள்ள முடிந்திருக்கிறது. தூரத்திலே என்றால் எவ்வளவு தூரத்திலே அவைகளைக் கண்டு நம்பினார்கள்? நம்பி அதை அணைத்துக் கொண்டார்கள்? இதை விளங்கிக் கொள்வதற்கு தயவு செய்து தொடருங்கள். தாவீது அரசன் தேவனுக்கு ஆலயம் கட்ட விரும்பின போது, தேவன் நாத்தானைக் கொண்டு இவ்விதம் சொன்னார். **உன் வீடும் உன் ராஜ்யமும் என்றென்றைக்கும் உனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும் என்கிறார் என்று** (சாமு. 7:16) அதற்கு தாவீது, 'கர்த்தராகிய ஆண்டவரே இது இன்னும் உன்னுடைய பார்வைக்குக் கொஞ்சம் காரியமாயிருக்கிறது என்று கர்த்தராகிய ஆண்டவராயிருக்கிற தேவரீர் அடியானுடைய வீட்டைக் குறித்து வெகுதூரமாயிருக்கும் காலத்துச் செய்தியை மனுஷர் முறைமையாய்ச் சொன்னீரே என்றான் (7:19).

அதாவது, சுமார் ஓர் ஆயிரம் ஆண்டுகளில் இயேசுவைக் கொண்டு நிறைவேறப் போகும் செய்தியை **வெகு தூரத்துச் செய்தி** என்று கூறுகிறான். பழைய ஏற்பாட்டில் ஏராளமான தீர்க்கதரிசனங்கள் இயேசுவைப் பற்றியும் அவர் மூலமாக நடைபெறப்போகும் காரியங்கள் பற்றியும் விபரமாக விளங்கும்படி சொல்லப்பட்டிருக்கிறது. விபரமாகச் சொல்லப்பட்டு ஓர் ஆயிரம் ஆண்டு கழித்து நிறைவேறுபவைகளையே வெகுதூரத்துச் செய்தி என்று சொல்லப்பட்டிருக்கும்போது, ஆபேல், ஏனோக்கு, நோவா, ஆபிரகாம் போன்றவர்களுக்கு விபரமாக வெளிப்படுத்தப்படாத பரம தேசமாகிய பரலோகம் என்பது **எவ்வளவு தூத்துச் செய்தியாக இருந்திருக்குமென்று அப்படியே கொஞ்சம் எண்ணிப்பாருங்கள். அது எவ்வளவு தூரத்துச் செய்தியாக இருந்தாலும் அதை நம்பி, அணைத்துக் கொண்டு பரம தேசத்தை விரும்பி எப்படி வாழ்ந்திருக்கிறார்கள் என்றும் பாருங்கள்** நாமும் தான் இருக்கிறோம்..?!

அருமையானவர்களே! நமக்கு பரமதேசமாகிய பரலோகம் எப்படி வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது? தூரத்துச் செய்தியாகவா? அல்லது வெகுதூரத்துச் செய்தியாகவா? இரண்டுமேயில்லை அது, நாம் எட்டிப்பிடிக்கும் தூரத்துச் செய்தியாகத்தான் நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது. இயேசுவானவர் நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு ''**நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்வேன் என்றார்.** (யோவான் 14:3) எப்பொழுது வருவேன் என்று சொல்லிச் சென்றிருக்கிறார்?, இதோ! சீக்கிரம் வருகிறேன்'' என்றே சொல்லிச் சென்றுள்ளார்.

இப்பொழுது சொல்லுங்கள், பரலோகம் என்பது நமக்கு தூரத்துச் செய்தியா? பக்கத்துச் செய்தியா? சீக்கிரம் என்பது தூரமா? பக்கமா?நிச்சயமாகவே பக்கம்தான். அப்படியானால், தூரத்திலே கண்டவர்களே, நம்பி அனைத்துக் கொண்டு, பரம தேசத்தை விரும்பி காத்திருந்திருக்கிறார்களென்றால், நாம் எவ்வளவு தூரம் பரலோகத்தை நம்பி, அதற்காகாகக் காத்திருக்க வேண்டுமென்று எண்ணிப்பாருங்கள் உண்மையாகவே நாம் பரலோகத்தை நம்பி காத்திருக்கிறவர்களாக உள்ளோமா? உங்கள் பதில் இல்லையென்பதானால், இது முதலாகிலும், நாம் பரம தேசத்தை நம்பி அணைத்து அதற்காகக் காத்திருக்கிறவர்களாக இருப்போம்.

II. **அந்நியரும், பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு....**

பரம தேசத்தை விரும்பிய அத்தேவ மனிதர்களிடமிருந்து நம்மால் கற்றுக் கொள்ள முடிகின்ற இரண்டாவது பாடம், **பூமியின் மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு விசுவாசத்தோடே மரித்தார்கள்** என்பது. பரம தேசமாகிய பரலோகத்தை நாடுகிறவர்களுக்குள்ளாக இருக்க வேண்டிய மிக முக்கியமான குணங்களில் ஒன்று, **இந்த பூமி சதம் அல்ல** என ஏற்றுக் கொள்வது. யாரெல்லாம் இந்த உண்மையை ஏற்றுக் கொள்கிறார்களோ அவர்களால்தான் பரலோகத்திற்காக வாழ முடியும். விசுவாச வீரர்களின் பட்டியலில் வரும் அநேகர் இந்த உண்மையை உணர்ந்தவர்களாகவே வாழ்ந்துள்ளனர். செல்வச் சீமானாக வாழ்ந்த ஆபிரகாம் ஏத்தின் புத்திரரிடத்தில் ‘‘ **நான் அந்நியனும், பரதேசியுமாய் இருக்கிறேன்** (ஆதி23:4) என்று சொல்லியுள்ளார். இன்னும் எகிப்துக்குச் சென்ற யாக்கோபு பார்வோனிடத்தில் **நான் பரதேசியாய் சஞ்சரித்த நாட்கள் 130 வருஷம் என்றான்** (ஆதி. 47:9) மேலும், தாவீது சங் 39:12-ல் **அந்நியனும், பரதேசியுமாயிருக்கிறேன்** என்கிறான். இந்த எண்ணம் இவர்களது அடிமனதில் ஆழமாக இருந்தபடியால்தான் நிலையான நகரத்திற்குக் காத்திருக்க முடிந்தது.

இக்கருத்தை பரிசுத்த ஆவியானவர், புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களைக் கொண்டும் வலியுறுத்தியிருக்கிறார். **பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்து போனாலும் தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம். ஏனெனில் இந்தக் கூடாரத்திலே தவித்து, தம்முடைய பரம வாசஸ்தலத்தைத் தரித்துக்கொள்ள மிகவும் வாஞ்சையுள்ளவர்களாயிருக்கிறோம்** (கொரி 5:1,2). இன்னும் **நம்முடைய குடியிருப்பு பரலோகம்** என்று பிலிப்பி பட்டணத்து சபையாருக்கு எழுதும்போதும் சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய எபிரெய ஆசிரியரே கூட, **நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை வரப்போகிறதையே தேடுகிறோம்** என்று கூறியுள்ளார் (எபி13:14).

இந்தப் பரம பக்தர்கள் செய்த இன்னொரு முக்கிய காரியம் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டதோடு நிற்காமல் விசுவாசத்தோடே மரித்திருக்கிறார்கள். அதாவது, கடைசி மூச்சு வரை தங்களுடைய நம்பிக்கைக்காக, தங்களது எதிர்பார்ப்புக்காக வாழ்ந்திருக்கிறார்கள். எவ்வளவு பெரிய விசுவாசம் பாருங்கள்! மெய்க் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு இப்படிப்பட்ட விசுவாசம் மிக மிக முக்கியம். நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவால் **முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்** (மத்.10:22) என்றுரைக்கப்பட்ட வார்த்தைகளின் பொருள், அவர் வருவதற்கு சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக வாழ்ந்த இவர்களுக்கு நன்றாகவே விளங்கியிருக்கிறது.

அன்பானவர்களே! இப்படிப்பட்ட உண்மைகளை அறிந்தவர்களாக இன்றைக்கு நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்தை நடத்திக் கொண்டுள்ளோமா? சிந்தித்துப் பார்ப்போம். நாமும், பரம தேசத்துக்குப் பங்குள்ளவர்களாக மாற வேண்டுமானால், இந்த பூமியின் வாழ்க்கை எப்படிப்பட்டதென்பதைப் பூரணமாக உணர்ந்து கொள்ள வேண்டும். நாமும் விசுவாசத்தோடே மரிக்கத்தக்கதொரு விசுவாச வாழ்க்கை வாழ வேண்டும். அந்த விசுவாச வாழ்க்கை கிரியைகளுடன் கூடியதாக இருக்க வேண்டும். ஏனெனில் கிரியையில்லாத விசுவாசம் செத்தது (யாக். 2:17) ஆம் விசுவாசிக்கிற ஒருவன் தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கிறவனாக இருப்பான் (யோவான் 6:28:2,9).

ஆகவே, நம்முடைய வாழ்க்கையிலே தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பித்து, இந்த பூமியிலே நாம் அந்நியரும், பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு விசுவாசத்தோடே மரிக்கத்தக்கதானதொரு வாழ்க்கையை நடத்துவோமாக!

### III. தாங்கள் விட்டு வந்த தேசத்தை நினைக்கவில்லை

பரம தேசத்தை விரும்பிய இம்மாமனிதர்களிடமிருந்து நமக்கு கிடைக்கிற மற்றுமொரு பாடம், **தாங்கள் விட்டு வந்த தேசத்தை நினைக்காமல் வாழ்ந்தார்கள்** என்பது. இன்றைக்கு விசுவாச வாழ்க்கையில் அநேகர் விழுந்து போவதற்குக் காரணமே, தாங்கள் விட்டு வந்ததை நினைப்பது தான். பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது, **தேமா இப்பிரபஞ்சத்தின் மீது ஆசை வைத்து ....** (2தீமோ. 4:10) பிரிந்துபோனான் என்கிறார். பிரபஞ்சம் என்றால் உலகம். உலகத்தையும் உலகத்திலுள்ளவைகளையும் விட்டுப் பிரிந்து வந்தவன் மீண்டும் திரும்பிப் பார்த்தால் அவர்கள் நிலை கேடுள்ளதாக மாறிவிடும் அபாயம் உண்டு (2பேதுரு.2:20) எகிப்திலிருந்து விடுதலையான இஸ்ரவேல் ஜனங்கள், கானானுக்குள் பிரவேசிக்க முடியாமல் விழுந்துபோனதற்கு என்ன காரணம்? தாங்கள் விட்டு வந்தவைகளை சதா நினைத்தது தான். **நாம் எகிப்திலே கிரயமில்லாமல் சாப்பிட்ட மச்சங்களையும், வெள்ளரிக்காய்களையும், வெள்ளைப் பூண்டுகளையும் நினைக்கிறோம். இப்பொழுது நம்முடைய உள்ளம்**

வாடிப்போகிறது. **இந்த மன்னாவைத் தவிர நம்முடைய கண்களுக்கு முன்பாக வேறொன்றும் இல்லையே என்று சொன்னார்கள்** (எண்.11:5,6). இச்செயல் கர்த்தருக்கு மிகுந்த கோபத்தை உண்டாக்கினது (11:10). ஆம், அவராலே அழைக்கப்பட்டவர்கள் பின்னிட்டுப் பார்ப்பதை தேவன் ஒரு போதும் விரும்புவதில்லை.

அது மாத்திரமா, நம்மெல்லாருக்கும் நன்கு தெரிந்த லோத்தின் மனைவி எப்படி? **மலைக்கு ஓடிப்போ** என்ற தேவன் வார்த்தைக்குச் செவி கொடாமல் அந்த ஊருக்குப் போகிறேன் என்று கேட்டு, அதையும் தேவன் சொல்லியபடி செய்யாமல், திரும்பிப் பார்த்து **உப்புத்தூண் ஆனாள்** (ஆதி. 19:26) விட்டு வந்ததை திரும்பிப் பார்த்ததால் வந்த வினை அவளை மட்டும் பாதிக்காமல், அவளுடைய பிள்ளைகள் இரண்டு பேருக்கும் சாபமாகவும் மாறியது (ஆதி. 19:33-36) விட்டு வந்ததைத் திரும்பிப் பார்ப்பதின் பயங்காரம் உங்களுக்கு விளங்குகிறதா இல்லையா?

ஆனால், இந்த ஆபிரகாமோடு சேர்ந்த அந்த ஆதிப் பிதாக்கள் தாங்கள் விட்டு வந்த காரியத்தில் மிகவும் கவனமாகவும் எச்சரிப்பாகவும் இருந்தார்கள். ஆம், தன் மகன் ஈசாக்குக்குப் பெண் பார்த்தபோது, தன் வேலைக்காரரிடம் என்ன சொல்லுகிறான் பாருங்கள். **அதற்கு ஆபிரகாம் நீ என் குமாரனை மறுபடியும் அங்கே அழைத்துப் போகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு** (ஆதி.24:6) என்றான். கர்த்தர் என் மகனுக்குப் பெண்ணைக் கொடுப்பார். அப்படிக் கொடாவிட்டாலும் என் மகனை மாத்திரம் நான் விட்டு வந்த தேசத்திற்கு அழைத்துக் கொண்டு போக வேண்டாம் என்று உறுதிபடக் கூறினான். இப்படிப்பட்ட உறுதிதான் ஒவ்வொரு கிறிஸ்தவனிடமும் இருக்க வேண்டுமென்று இயேசுவானவர் போதித்துள்ளார். இவ்வசனத்தைக் கவனியுங்கள். அதற்கு இயேசு கலப்பையின் மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப் பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியானவன் அல்ல என்றார் (லூக்:62) பின்னிட்டுப் பார்ப்பதை வேதாகமம் எப்பொழுதும் எதிர்த்தே வந்திருக்கிறது.

அன்பான தேவப் பிள்ளையே! நாம் மேலே பார்த்த காரியங்களில் நாம் ஒவ்வொருவரும் எப்படிப்பட்டவர்களாக உள்ளோம்? நாம் பாவத்திற்கு மரித்து கிறிஸ்துவுடனே கூட எழுந்தது உண்மையானால் பூமியிலுள்ளவைகளைத் தேடாமல் மேலானவைகளைத் தேடுகிறவர்களாகவே இருக்க வேண்டும் (கொலோ.3:1,2).

**தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!**

## கிறிஸ்துவின் சீஷர்களின் அடையாளங்கள்

- கிறிஸ்துவின் சீஷன் அவருடைய உபதேசத்தில் நிலைத்திருப்பான் (யோவான் 8:31)
- கிறிஸ்துவின் சீஷன் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கிறார்கள் (யோவான் 13:34-35)
- கிறிஸ்துவின் சீஷன் கனிக்கொடுக்கிறான் (யோவான் 15:5-10)

# ஆவிக்குரிய வரங்கள்

Bro. J.C. சோட்

**நா**ம் ஏற்கனவே பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு பற்றியும், கைகளை வைத்துப் பெறும் அளவிலான பரிசுத்த ஆவி பற்றியும் பார்த்தோம். அற்புதங்கள் செய்ய முடியாத அளவிலான பரிசுத்த ஆவியின் வரங்களைப் பற்றியும் நாம் கூறியிருக்கிறோம். ஆவிக்குரிய வரங்களைப் பற்றி விவாதிக்கும்போது அற்புதங்களைச் செய்யும் அளவிலான பரிசுத்த ஆவி பற்றியும் அத்தகைய அற்புதங்களைச் செய்யும் அளவிலான பரிசுத்த ஆவியின் வழியாக வந்த வித்தியாசப்பட்ட வரங்கள் பற்றியும் அதாவது அற்புத வரங்கள் பற்றியும் நாம் படித்துக் கொண்டிருக்கிறோம்.

உண்மையில் அப்போஸ்தலர்களும் அவர்கள் யார் பேரில் கைகளை வைத்தார்களோ அவர்களும் மட்டுமே அற்புதங்கள் செய்யும் இயல்பான ஆவிக்குரிய வரங்களைப் பெற்றிருந்தனர். மேலும், அப்போஸ்தலர்கள் மட்டுமே அற்புத வரங்களை பிறருக்கு அளிக்கும் வல்லமையைப் பெற்றிருந்தனர். அப்போஸ்தலனாகிய பவுல் அவருடைய ரோமச் சகோதரர்களுக்கு **நீங்கள் ஸ்திரப்படுவதற்காக ஆவிக்குரிய சில வரங்களை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கும் உங்களைக் காண வாஞ்சையாயி ருக்கிறபடியினாலே** (ரோமர் 1:10–11) என எழுதினர். வேறு விதமாகச் சொன்னால் அவர்களில் சிலர் மேல் கைகளை வைத்து பரிசுத்த ஆவியின் வல்லமையை அவர்களுக்கு அளிக்கும் சந்தர்ப்பத்திற்காக அவர் அவைகளைச் சந்திக்க விரும்பினார். அங்குள்ள ஊழியம் பலப்படவும் கிறிஸ்து எங்கும் அறிவிக்கப்படவும் அவர்களுக்கு அது உதவியாக இருக்கும்.

பவுல் கொரிந்து கிறிஸ்தவர்களுக்கு கூறினார்: **அன்றியும், சகோதரரே, ஆவிக்குரிய வரங்களைக் குறித்து நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை. நீங்கள் அஞ்ஞானி களாயிருந்த போது ஏவப்பட்டபடியே ஊமையான விக்கிரகங்களிடத்தில் மனதைச் செலுத்தினீர்கள் என்று உங்களுக்குத் தெரியுமே ; ஆதலால் தேவனுடைய ஆவியினாலே பேசுகிற எவனும் இயேசுவைச் சபிக்கப்பட்டவனென்று சொல்லமாட்டானென்றும் பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவைக் கர்த்தரென்று ஒருவனும் சொல்லக்கூடாதென்றும், உங்களுக்குத் தெரிவிக்கிறேன். வரங்களில் வித்தியாசங்கள் உண்டு, எல்லோருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே; ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப் பட்டிருக்கிறது.**

**எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும் வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும், வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்கு தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்யாணம் பண்ணுதலும் அளிக்கப்படுகிறது. இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்** (1கொரி 12:1-11).

மேற்சொன்ன வசனங்களில் ஆவியானவரின் அற்புத வரங்களைப் பற்றி பவுல் சொல்லிக்கொண்டிருப்பதை நாம் தெளிவாகக் காணமுடிகிறது. அற்புத வரங்களாகிய ஞானம், அறிவு, விசுவாசம், குணமாக்குதல், அற்புதங்கள், தீர்க்க தரிசனம், ஆவிகளைப் பகுத்துணர்தல், அந்நிய பாஷைகளுக்கு வியாக்கியானம் பண்ணுதல் ஆகியவை பற்றி அவர் பேசுகிறார். இந்த வரங்களைப் பெற்றுக்கொள்ளத் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவருக்கும் எல்லா வரங்களும் ஒவ்வொருவருக்கும் அளிக்கப்படவில்லை என்பதை இங்கு குறிப்பிட வேண்டும். வெவ்வேறு வரங்கள் வெவ்வேறு மனிதர்களுக்குத் தரப்பட்டன. ஒருவேளை, சில குறிப்பிட்ட வரத்திற்கு சிலர் பிறரை விட அதிகத் தகுதியுள்ளவர்களாக இருந்தனர்.

ஒவ்வொரு வரமும் ஒவ்வொரு காரணத்திற்குப் பயன்பட்டது. பவுல் கூறினார்: 'அன்பை நாடுங்கள்; ஞான வரங்களையும் விரும்புங்கள்; விசேஷமாய்த் தீர்க்க தரிசன வரத்தை விரும்புங்கள் . ஏனெனில், அந்நிய பாஷையில் பேசுகிறவன் ஆவியினாலே இரகசியங்களைப் பேசினாலும் அவன் பேசுகிறதை ஒருவனும், அறியாதிருக்கிறபடியினாலே, அவன் மனுஷரிடத்திலே பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறான். தீர்க்கதரிசனஞ்சொல்லுகிறவனோ சபைக்கு பக்தி விருத்தி உண்டாகப் பேசுகிறான். நீங்களெல்லாரும் அந்நிய பாஷைகளைப் பேசும்படி விரும்புகிறேன். ஆகிலும், அந்நிய பாஷைகளில் பேசுகிறவன் சபைக்குப் பக்தி விருத்தி உண்டாகும்படிக்கு அர்த்தத்தையும் சொல்லாவிட்டால் தீர்க்கதரிசனம் சொல்லுகிறவன் அவனிலும் மேன்மையுள்ளவன் ; ஆதலால், நீங்கள் தீர்க்க தரிசனம் சொல்லுகிறவர்களாக வேண்டுமென்று அதிகமாய் விரும்புகிறேன் (1கொரி 14:1-5). தீர்க்கதரிசன வரமானது சகல ஆவிக்குரிய வரங்களிலும் மேலானது என இங்கு பவுல் காட்டுகிறார். ஏனெனில், இதன் மூலமாக தேவனுடைய விருப்பம் வெளிப்படுகிறது. அத்தகைய தேவனுடைய விருப்பத்தை அல்லது அவர் கற்பித்ததை மக்களுக்கு வெளிப்படுத்துவதில் மட்டுமே அந்நிய பாஷை முக்கியத்துவம் பெறுகிறது.

ஒரு குறிப்பிட்ட ஆவிக்குரிய வரத்தை மட்டுமே பெற்றவன் இருக்கும் போது மற்றொருவன் எவ்வித ஆவிக்குரிய வரத்தையும் பெறாதவனாக இருந்த பல சந்தர்ப்பங்கள் உண்டு. உதாரணமாக இங்கே படிக்கிறோம். ''ஆகையால், சபையாரெல்லாரும் ஏகமாய்க் கூடிவந்து, எல்லாரும் அந்நிய பாஷைகளிலே பேசிக் கொள்ளும்போது, கல்லாதவர்களாவது அவிசுவாசிகளாவது உள்ளே பிரவேசித்தால் அவர்கள் உங்களைப் பைத்தியம் பிடித்தவர்களென்பார்கள் அல்லவா? எல்லாரும் தீர்க்க தரிசனம் சொல்லுகையில் அவிசுவாசியொருவன் அல்லது கல்லாதவன் ஒருவன் உள்ளே பிரவேசித்தால் அவன் எல்லாராலும் உணர்த்துவிக்கப்பட்டும், எல்லாராலும் நிதானிக்கப்பட்டும் இருப்பான். அவனுடைய இருதயத்தின் அந்தரங்கங்களும் வெளியரங்கமாகும்; அவன் முகம்குப்புற விழுந்து தேவனைப் பணிந்துகொண்டு தேவன் மெய்யாய் உங்களுக்குள்ளே இருக்கிறாரென்று அறிக்கையிடுவான். நீங்கள் கூடி வந்திருக்கிற போது உங்களில் ஒருவன் சங்கீதம் பாடுகிறான். ஒருவன் போதகம் பண்ணுகிறான், ஒருவன் அந்நிய பாஷையைப் பேசுகிறான், ஒருவன் இரகசியத்தை வெளிப்படுத்துகிறான், ஒருவன் வியாக்கியானம் பண்ணுகிறான்.

சகோதரரே, இது என்ன? சகலமும் பக்தி விருத்திக்கேதுவாகச் செய்யக் கடவது. யாராவது அந்நிய பாஷையிலே பேசுகிறதுண்டானால் அது இரண்டு பேர் மட்டில் அடங்கவும், அவர்கள் ஒவ்வொருவராய்ப் பேசவும் ஒருவன் அர்த்தத்தைச் சொல்லவும் வேண்டும். அர்த்தம் சொல்லுகிறவன் இல்லாவிட்டால் சபையிலே பேசாமல் தனக்கும் தேவனுக்கும் தெரியப் பேசக்கடவன். தீர்க்கதரிசிகள் இரண்டு பேராவது, மூன்று பேராவது பேசலாம், மற்றவர்கள் நிதானிக்கக்கடவர்கள். அங்கே உட்கார்ந்திருக்கிற மற்றொருவனுக்கு ஏதாவது வெளிப்படுத்தப்பட்டால் முந்திப் பேசினவன் பேசாமலிருக்கக் கடவன். எல்லாரும் கற்கிறதற்கும் எல்லாரும் தேறுகிறதற்கும் நீங்கள் அனைவரும் ஒவ்வொருவராக தீர்க்க தரிசனம் சொல்லலாம். தீர்க்கதரிசிகளுடைய ஆவிக்கள் தீர்க்கதரிசிகளுக்கு, அடங்கியிருக்கிறதே. தேவன் கலகத்திற்கு தேவனாயிராமல் சமாதானத்திற்குத் தேவனாயிருக்கிறார். பரிசுத்தவான்களுடைய சபைகளெல்லாவற்றிலேயும் அப்படியே இருக்கிறது (1கொரி. 14:23-33).

இப்போது, இவை அனைத்திலும், வித்தியாசமான வரங்களைப் பெற்ற பல சீடர்களின் பல்வேறு பிரச்சனைகள் பற்றியும் அவர்களும் பிறரும் பயன் அடையும் விதத்தில் அவற்றை எப்படி உபயோகிப்பது என்பது பற்றியும் பவுல் கூறுகிறார். வேறு விதமாகச் சொன்னால் விசுவாசிகள் கூடியிருக்கும்போது அவர்களில் ஒருவன் அந்நிய பாஷையில் பேசும்போது, அதை மொழிபெயர்த்துச் சொல்லும் வரத்தைப் பெற்றவன் அங்கு ஒருவனும் இல்லையென்றால் பேசாமலிருப்பது நலம்.

ஆவிக்குரிய வரங்களை கற்பிக்கவும், உபதேசிக்கவும், உபயோகிக்கப்பட வேண்டுமே தவிர, குழப்பத்தை விளைவிக்க அல்ல.

எபிரெயர் ஆசிரியர் கூறினார்: **ஆகையால், நாம் கேட்டவைகளை விட்டு விலகாதபடிக்கு, அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய்க் கவனிக்க வேண்டும். ஏனெனில், தேவதூதர் மூலமாய்ச் சொல்லப்பட்ட வசனத்திற்கு விரோதமான எந்தச் செய்கைக்கும் கீழ்படியாமைக்கும் நீதியான தண்டனை வரத்தக்கதாக அவர்களுடைய வசனம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க, முதலாவது கர்த்தர் மூலமாக அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும், அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்து கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும் தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்வோம்?** (எபி.2:1-4). இறுதியாக, பவுல் எபேசு கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது, **கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத் தக்கதாக நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது'' என்று குறிப்பிட்டார்.** (எபே.4:7). **தொடர்ந்து** ஆவிக்குரிய வரங்களைப் பற்றி அவர் கூறும்போது, **மேலும், நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத் தக்க பூரண புருஷராகும் வரைக்கும் பரிசுத்தவான்கள் சீர் பொருந்தும் பொருட்டு சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்தி விருத்தி அடைவதற்காகவும், அவர் சிலரை அப்போஸ்தலராகவும் சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும் சிலரைச் சுவிசேஷராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும், ஏற்படுத்தினார். நாம் இனி குழந்தைகளாயிராமல், மனிதருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாய் இருக்கும்படியாக அப்படிச் செய்தார். அவராலே சரீரம் முழுதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயமும் தன்தன் அளவுக்குத் தக்கதாய்க் கிரியை செய்கிறபடியே அது அன்பினாலே தனக்கு பக்தி விருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது** (எபே.4:11-16) **என்கிறார்.**

எனவே, ஆவிக்குரிய வரங்கள் தற்காலிகமானது, புதிய ஏற்பாடு எழுத்து வடிவில் கிடைப்பதற்கு முன்னர், சபையானது வளர்ச்சியடையும்படியாகவும், சுவிசேஷம் எல்லா இடங்களுக்கும் செல்லும்படியாக உதவவும் கொடுக்கப்பட்டன. புதிய ஏற்பாடு எழுதப்பட்டு கிடைத்ததும் இந்த வரங்கள் நின்று போயின.

★

பெண்கள் பகுதி

# உள்ளதையெல்லாம் கொடுத்தவள்

Sis. ரேச்சல் இராஜநாயகம்

அருமையான சகோதரிகளே! இம்மாதமும் உங்களோடு கூட சேர்ந்து வேத வசனங்களை கற்றுக்கொள்ள தேவன் கொடுத்த சிலாக்கியத்திற்காக அவருக்கு ஸ்தோத்திரம். வேதாகமத்தில் காணப்படும் பெண்களின் வாழ்க்கை மூலமாக, எல்லாக் காலத்திலும் வாழும் பெண்கள் அறிந்துகொள்ள வேண்டிய பாடங்கள் நிறைய உள்ளன. மாற்கு 12-ம் அதிகாரம் 41 முதல் 44 முடிய உள்ள வசனப் பகுதியில், நினைவுகூறப்பட வேண்டிய ஒரு பெண் இருக்கிறாள். நாம் தேவனுக்கு செய்ய வேண்டிய முக்கிய கடமைகளில் ஒன்றை அவள் வாழ்க்கை நமக்கு கற்றுக் கொடுக்கிறது. அதென்னவென்றால் அது ஒரு கிறிஸ்தவனுக்கும், பணத்திற்கும் உள்ள உறவு பற்றியது.

அருமையானவர்களே எப்போதுமே தேவனுக்கும், மனிதனுக்கும், அவனுடைய உடமைகளுக்கும் சம்பந்தம் இருந்துகொண்டேயிருக்கிறது. ஆதியிலே, முதல் குடும்பம் தொடங்கின காலத்திலிருந்து, மனிதன் தனக்குள்ளதைப் பலியாகச் செலுத்தும்படி தேவன் கட்டளை கொடுத்துள்ளார். எனவே, அநேகர் நினைப்பது போலல்லாது, இந்தக் காரியத்தில் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் நிறைய உள்ளன. ஒரு கிறிஸ்தவனும், பணமும் சம்பந்தப்பட்ட காரியம் அன்றாடம் நடைமுறையில் இருப்பதாலும், ஒவ்வொரு தனி நபரையும் சந்தித்து கேட்டுக் கொண்டிருக்கும் கேள்வியாக இருக்கும். இப்பணத்தைப் பற்றிய பாடம் மற்ற பாடங்களைப் படிப்பதை விட மிகவும் பிரயோஜனமாயிருக்கும்.

ஒரு குழந்தை தன் பெற்றோரிடம் மிட்டாய் வாங்க காசு வாங்கும் சமயத்திலிருந்து தன் வாழ்நாள் பரியந்தமும் பணம் அவன் கையாளும் ஒன்றாக மாறிவிடுகிறது. மளிகை, துணிமணிகள் மற்ற தேவைகள் வாங்கப் போகும்போது, அங்கே முடிவெடுத்தல் கட்டாயமான ஒன்றாகும். பொதுவாக, பணம் செலவழிப்பதில் பெண்களின் பங்கு அதிகமாக இருக்கிறது. இது உண்மையாதலால், கர்த்தருக்குக் கொடுக்கும் அளவு பற்றி முடிவெடுப்பதில் பெண்கள் தங்கள் முழு ஒத்துழைப்பையும் கொடுக்க வேண்டியது மிக அவசியம்.

இயேசு கிறிஸ்து கொடுத்தல் விஷயத்தில் மிகவும் அக்கறையுள்ளவராயிருந்ததினால் காணிக்கைப் பெட்டிக்கு எதிராக உட்கார்ந்து, ஜனங்கள் காணிக்கைப் பெட்டியில் பணம் போடுகிறதைப் பார்த்து கொண்டிருந்தார். ஏழையான ஒரு விதவையும் வந்து ஒரு துட்டுக்குச் சரியான இரண்டு காசைப் போட்டாள். சந்தர்ப்பத்தை எதிர்நோக்கி, எப்போதும் ஆயத்தமாயிருக்கும் நமதாண்டவர் இயேசு கிறிஸ்து, உடனே தம் சீஷர்களை தம்மிடம் அழைத்து, காணிக்கைப் பெட்டியில் பணம் போட்ட மற்றெல்லாரைப் பார்க்கிலும் இந்த ஏழை விதவை அதிகமாய்ப் போட்டாள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன் என்றார் ( மாற்கு 12:41-44 ).

இங்கே, இரண்டு வித்தியாசமான செல்வங்கள் பற்றிப் பேசப்படுகிறது. இச் சம்பவத்தில், இந்த ஏழை விதவை உலகப் பொருளில் ஏழையாகவும் தேவ நீதியில் பணக்காரியாயும் இருந்தாள். **அவளுடைய பணப்பை மெலிந்ததாகவும், ஆத்துமாவோ கொழுத்தும் காணப்பட்டது.** ஒருவர் சரீரப்பிரகாரமான செல்வம் பெற்றிருப்பது தவறல்ல. ஆனால், தேவனோடும் செல்வந்தனாக இருக்க வேண்டும். அது அவசியம். முற்பிதாவாகிய ஆபிரகாம், யோசேப்பு, பக்தன் யோபு போன்றவர்கள் செல்வச் சீமான்களாக இருந்து கொண்டு நீதிமான்களாயும் இருந்தார்கள். ஒருவன் எவ்வளவு ஐசுவரியமுள்ளவனாயிருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல என்பதை விளக்கும் வகையில் ஐசுவரியவான் ஒருவனை மதிகேடனே! என்று சொல்லிவிட்டு ( லூக்கா. 12 : 15-20 ), தேவனிடத்தில் ஐசுவரியவனாயிராமல், தனக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கிறவன் இப்படியே இருக்கிறான் ( வ. 21 ) என்று நாம் பயன் பெறும்படி சொல்லியிருக்கிறார். தேவனுக்குப் பயப்படுகிற ஒருவன், தேவன் செல்வம் இல்லாமல் வாழ முடியும். ஆனால், செல்வந்தன் ஒருவன் தேவன் இல்லாமல் வாழ முடியாது. ஐசுவரியமும், கனமும், நிலையான பொருளும், நீதியும் என்னிடத்தில் உண்டு ( நீதி. 8:18 ). தேவன் கொடுக்கும் ஐசுவரியம், நீதி இவைகள் நிலைத்து நிற்கக்கூடியது. எவ்வளவு அழகான கருத்தாக இது இருக்கிறதென்று பாருங்கள். இந்த ஏழை விதவையிடம் இரண்டு காசுகள்தான் இருந்தன. ஆனால், நிலையான ஐசுவரியத்தையும் நீதியையும் அவள் பெற்றிருந்தாள். மேலும், கிறிஸ்து இரண்டு வகையான செல்வத்தைப் பற்றி பேசுகிறார்.

**பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம்... பரலோகத்திலே உங்களுக்கு பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்...**(மத். 6:19,20). பணம் சம்பாதிப்பதும், அதை சேர்த்து வைப்பதும் தவறல்ல. ஏனென்றால், வேதாகமத்தில் வேறு இடங்களில் இந்த இரண்டையும் செய்யச் சொல்லுகிறது. ஆனால், இந்த வசனப்பகுதி ஆவிக்குரிய செல்வம் முதலிடம் பெற வேண்டும். உலக செல்வம் அதற்குப் பின்னாகத்தான் செல்லவேண்டும் எனக் கூறுகிறது.

தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் எந்தக் கட்டளையும் பாரமானவைகள் அல்ல, காரணமற்றவைகளும் அல்ல. கொடுக்கும் விஷயத்தில் தேவன் நமக்கு எப்படிக் கட்டளையிட்டிருக்கிறார் என்று நாம் புரிந்து கொண்டால் கட்டாயமாக நாம் தாராளமாகவும், மனமுவந்தும் கொடுப்போம். கட்டளை என்றால் என்ன? கட்டாயம் செய்யப்பட வேண்டிய ஒன்று. நம்முடைய நன்மைக்காக தேவன் கொடுக்கச் சொல்கிறார். அது எவ்வாறு நமக்கு நன்மையைக் கொண்டுவரும்? முதலாவது, உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும் (மத். 6:21) நம் இருதயம் ஆவிக்குரிய காரியங்களை தைரியமாக கொண்டிருக்க வேண்டும். அது நம்மைப் பரலோகத்திற்கு அழைத்துச் செல்ல உதவியாய் இருக்கும். எந்தக் காரி யத்திற்காக அதிகம் செலவழிக்கிறோமோ அந்தக் காரியத்தில் அதிக நாட்டமும், அதற் காக வேலை செய்யவும் நம்மை தூண்டும். நம் பொக்கிஷத்தின் இடமானது நம் இருதயத்தை பிரதிபலிக்கும். கர்த்தருக்குக் கொடுக்கத் தவறும் போது அந்த இருதய பிரச்சனை. நம் ஆத்துமாவை அழித்துவிடும். இது ஒரு நீங்கா வியாதி. இருதயத்தின் தொல்லைகள் நீங்கி ஆவிக்குரிய காரியங்களில் நாட்டம் செலுத்தும்போது, பெலமான இருதயம் பெற்ப்பட்டு கர்த்தருக்காகத் தாராளமாய் கொடுக்கலாம்.

இரண்டாவதாக, தேவனைப் போலவும், கிறிஸ்துவைப் போலவும் இருப்பதற்காக நாம் கொடுக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். கிறிஸ்தவத்தின் துவக்கமே கொடுத்தல் தான். தாராளமாய் விரிக்கும் கரங்களும், தான தர்மங்களைச் செய்யும் கைகளுமே (எபி. 13:16) தேவன் மிகச்சிறந்த முதன்மையான கொடுத்தலாக தன் ஒரே குமாரனையே கொடுத்தார். கிறிஸ்து தன் விலையேறப்பெற்ற உடைமைகளான இரத்தத்தையும், உயிரையும் கொடுத்தார். முதல்

நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் மனமுவந்தும், தாராளமாயும் கொடுத்தார்கள். சிலர் தங்கள் உயிரையே கொடுத்தார்கள். ஆனால், கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்கிறவர்கள் கொடுக்கிறதின் அர்த்தமே இன்னதென்று தெரியாமல் கிறிஸ்தவர்களாயிருக்கிறார்கள். மனப்பூர்வமாக கொடுக்கும் பழக்கத்தை பெற்றுக் கொள்ளும்போது தான் நாம் கிறிஸ்துவைப் போல வாழ்ந்து கிறிஸ்தவத்தைப் பரப்ப முடியும்.

மூன்றாவதாக, கொடுத்தல் மூலமாக நாம் தேவனைக் கிட்டிச் சேர முடியும் (1கெ. 9:14). அதோடு அவரில் அதிக அன்பு செலுத்த முடியும். நாம் எந்த ஒரு காரியத்திற்காக தியாகம் செய்கிறோமோ, அதில் அதிக அன்பு செலுத்துவோம், இந்தத் தத்துவம் தன் பெற்றோரிடம் அன்பு கூருவதற்குப் பொருந்தாது. ஏனென்றால், பெற்றோர் தான் பிள்ளைகளுக்காக தியாகம் செய்கிறார்கள். அவர்கள் தான் பிள்ளைகளை உலகிற்குள் கொண்டு வருவதில் இருந்து, அவர்கள் சுகவீனத்தில் அதிக நேரத்தைச் செலவிடுதல், கஷ்டப்பட்டு உழைத்து அவர்கள் தேவைகளை சந்திப்பது, அவர்களுக்காக திட்டமிடுதல், நல்ல எதிர்காலத்தை ஏற்படுத்துதல் போன்றவைகளுக்காக தியாகம் செய்கிறார்கள். எப்படி இவ்வாறு செய்யமுடிகிறது? அன்பு தியாகத்தைக் கொடுக்கிறது. தியாகம் அன்பைக் கொடுக்கிறது (1யோவான். 4:9,10). இவை இரண்டும் பிரிக்க முடியாதவைகள்.

இதின் மேன்மையை உணர்ந்ததின் காரணமாகத்தான் இயேசு காணிக்கை போடும் இடத்தில் உட்கார்ந்தார். தன்னைப் பின்பற்றுகிறவர்கள் தங்கள் நன்மைக்காக இப்பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று இயேசு அறிந்திருந்தார்.

நான்காவதாக, சுவிசேஷம் பரவுவதற்காக நாம் கொடுக்க வேண்டும் (1கொரி. 9:14) பணம் இல்லாமல் உலகெங்கும் சுவிசேஷத்தை எடுத்துச்செல்ல முடியாது. ஆத்தும ஆதாயத்தில் நமக்கு விசுவாசம் இருக்குமானால், கொடுக்கிற விஷயத்திலும் நமக்கு விசுவாசம் இருக்க வேண்டும்.

ஐந்தாவதாக, தேவையில் இருப்பவர்களைத் தாங்குவதற்காக நாம் கொடுக்க வேண்டும் (கொரி. 8: 1 – 5) தேவையில் இருப்பவர்களைக்கண்டு கொள்ளாமல் இருப்போமானால் நாம் கிறிஸ்தவர்களாயிருக்க முடியாது. சபையானது இதற்குப் பொறுப்பாக இருப்பதினால், இதை நிறைவேற்ற பணம் தேவைப்படுகிறது.

அருமையானவர்களே! மேற்கண்ட காரியங்களில் இந்த ஏழை விதவையின் பங்கைக் இயேசுவானவர் கண்டதுபோல் நம்முடையை பங்கையும் அவர் காணவேண்டும். அப்படி செய்ய தேவன்கிருபை செய்வாராக! ஆமென்! ★

வாலிபர் பகுதி

# தேவனுடைய பார்வையில் புத்திமான்

சகோ. பென்னி மார்ட்டீன்

கிறிஸ்துவுக்குள் பிரியமான வாலிபர்களாகிய உங்களுக்கு வானவராம் இயேசு கிறிஸ்துவின் நல் நாமத்தில் வாழ்த்துதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இக்கட்டுரையின் வாயிலாக உங்கள் யாவரையும் மறுபடியும் சந்திப்பில் மனமகிழ்ச்சி அடைகிறேன். பொதுவாகவே, வாலிபர்களுக்கு எப்படியாவது அறிவை சம்பாதிக்க வேண்டும், ஞானவான்களாக இருக்க வேண்டும் என்னும் தணியாத தாகம் தொன்று தொட்டே இருந்து வருகிறது. அறிவைப் பெருக்கிக்கொள்ள அநேக வழிகள் கிடைப்பதும் இந்த வாலிபப்பருவத்தில் தான். வேதாகமத்தில் நாம் பார்க்கும்போது பிசாசானவன் சர்ப்பத்தின் உருவத்தில் வந்து தேவனால் தடைசெய்யப்பட்ட அக்கனியைப் புசித்தால் உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை, தீமை அறிந்து தேவர்களைப் போல இருப்பீர்கள் என்றும் ஏவாளையும், ஆதாமையும் வஞ்சித்தான். ஆதாமும் ஏவாளும் அறிவை அடைவதற்காகவே சாத்தானிடம் ஏமாந்து போனார்கள்(ஆதியாகமம் 3:46). தேவன் வாலிபர்களாகிய நாம் அறிவில் சிறந்து விளங்க வேண்டும், ஞானவான்களாயிருக்க வேண்டும் என்று விரும்புகிறார். ஆனால், நாம் எப்படிப்பட்ட அறிவை உடையவர்களாயிருக்க வேண்டும் என்று தேவன் தம்முடைய பரிசுத்த வாக்கியங்களில் சொல்லியிருக்கிறார். இதைப் பற்றிய தெளிவு எல்லோருக்கும் இருக்க வேண்டும். சரி, இப்போது வேதவசனங்களின்படி யார் ஞானவான்? ஒருவன் தன்னுடைய ஞானத்தை எப்படிக் காட்டுகிறான்? என்று பார்ப்போம்.

### I புத்திமான் தன் நல்நடத்தையின் மூலமாக புத்தியை வெளிப்படுத்துகிறான்:

நம்மில் பலர் உக்கிராணத்துவம் என்பது தேவன் நமக்குக் கொடுக்கிற பொருள்களைச் சரியாகக் கையாண்டு அதைக்குறித்து தேவனுக்குக் கணக்குக் கொடுப்பது மாத்திரம்தான் என்று தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறோம். இதன் காரணமாகத்தான் பலர் கர்த்தருக்கென்று எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கொடுப்பார்கள், ஆனால் நேரம் என்று வரும்போது அவர்கள் மறுத்து விடுவார்கள். யாக்கோபு ஆசிரியர் கூறும்போது உங்களில் ஞானியும் விவேகியுமாயிருக்கிறவன் எவனோ அவன் ஞானத்திற்குரிய சாந்தத்தோடே

தன் கிரியைகளை நல்ல நடக்கையினாலே காண்பிக்கக்கடவன் என்று ஞானவானைப்பற்றி சொல்கிறார். இந்த வசனத்தின் மூலமாக உண்மையான ஞானம் சாந்தத்தோடே சேர்ந்து வருகிறது என்பதை நாம் கற்றுக்கொள்கிறோம். மெத்தப்படித்த பலர் இந்த சாந்த குணம் இல்லாமல் இருக்கிறார்கள். இவர்கள் ஞானிகள் அல்ல என்று யாக்கோபு ஆசிரியர் சொல்கிறார். ஏனென்றால், அதிகம் படித்த அநேகருக்கு கர்வமும், மேட்டிமையும் தான் இருக்கும், சாந்த குணத்தை விலைக்குக் கேட்டாலும் தருவதற்கு அவர்களிடத்தில் இருக்காது 1கொரி. 3:18-20 வசனங்களை நாம் வாசிக்கும்போது **ஒருவனும் தன்னைத்தானே வஞ்சியாதிருப்பானாக;இவ்வுலகத்திலே உங்களில் ஒருவன் தன்னை ஞானியென்று எண்ணினால் அவன் ஞானியாகும்படிக்குப் பைத்தியக்காரனாகக்கடவன். இவ்வுலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாகப் பைத்தியமாயிருக்கிறது. அப்படியே ஞானிகளை அவர்களுடைய தந்திரத்திலே பிடிக்கிறாறென்றும் ஞானிகளுடைய சிந்தனைகள் வீணாயிருக்கிறதென்றும் கர்த்தர் அறிந்திருக்கிறாரென்று எழுதியிருக்கிறது.**

அப்படியென்றால், இவ்வுலகத்தின் ஞானம் நமக்கு அவசியமில்லை என்று பொருள்படாது. நாம் இவ்வுலகில் வாழும் வரை நமக்கு நிச்சயமாக இவ்வுலகின் ஞானம் அவசியம்தான். ஆனால், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும், அவரை அறிகிற அறிவிலும் நாம் வளர வேண்டும். அப்போதுதான் நாம் ஆவிக்குரிய அறிவைப் பெற்றுக் கொண்டு, ஆவிக்குரிய வளர்ச்சியையும் அடைய முடியும். இன்றைய நாட்களில் நாம், வாலிபர்களைப் பார்க்கும்போது இப்பூமிக்குரிய அறிவைப் பெருக்கி அதன்மூலம் பொருள் கிட்டவே முனைப்புக் காட்டுகின்றனர். அதற்காக எந்த ஒரு தியாகத்தையும் செய்யத் தயங்குவதில்லை. இப்பூமிக்குரிய அறிவைப் பெருக்கிக் கொள்வதில் எந்தத் தவறும் இல்லை. ஆனால், ஆவிக்குரிய அறிவுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். ஏனென்றால், **கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; பரிசுத்தரின் அறிவே அறிவு** என்று சாலொமோன் ஞானி சொல்கிறார் (நீதி. 9:10). மேலும், ஆலோசனைக்குச் செவி கொடுக்கிறவனே ஞானமுள்ளவன் என்று வேதம் சொல்கிறது. ஆனால், மதியினர் ஆலோசனைக்குச் செவி கொடுப்பதில்லை. அதனால் தான் ஆலோசனையும் மெய்ஞானமும் என்னுடையவைகள் என்று தேவன் சொல்கிறார் (நீதி. 8:14).

### II புத்திமான் பயந்து தீமைக்கு விலகுகிறான்

ஞானவான் தீமை என்ன செய்ததென்றும், அது என்ன செய்யும் என்றும் அறிந்து பாவத்தின் வஞ்சனையையும் அறிந்து அதை விட்டு விலகுகிறான் (எபிரெயர் 3:13). பக்தனாகிய யோபு சொல்லும்போது,

பொல்லாப்பை விட்டு விலகுவதே புத்தி என்கிறார். இன்று பல வாலிபர்கள் தங்களைப் படிக்க வைத்து ஆளாக்கிய பெற்றோர்களை கனவீனப்படுத்தி அந்திய நாட்களில் அவர்களைப் பராமரிக்காமல் இருப்பதை நாம் சமுதாயத்தில் பார்க்கிறோம். இது ஞானமான காரியமல்ல, பெற்றோர்களைக் கனப்படுத்துபவன் ஞானவான் என்று வேதம் சொல்கிறது (நீதி. 13:1). வேதபாரகரும், பரிசேயர்களும் அதைத் தவிர்க்கப் பார்த்தபோது இயேசு அதைக் கண்டித்தார் (மத். 15:46). மேலும், சாலோமோன் ஞானி சொல்லும்போது தன் உதடுகளை அடக்குகிறவன் ஞானவான் என்று சொல்கிறார். ஒருவர் தன் உதடுகளை ஏன் அடக்க வேண்டும்? ஏனென்றால், சொற்களின் மிகுதியால் பாவமிருக்கும். புதிய ஏற்பாட்டில் பேதுரு ஆசிரியர் சொல்லும்போது **ஜீவனை விரும்பி நல்ல நாட்களைக் காண வேண்டுமென்றிருக்கிறவன் பொல்லாப்புக்குத் தன் நாவையும் கபடத்துக்குத் தன் உதடுகளையும் காத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்கிறார்** (1பேதுரு 3:10).

மேலும், கர்த்தருடைய வார்த்தகளைக் கேட்டு அவைகளின்படி செய்கிறவன் எவனோ அவன் ஞானவான் என்று வேதம் சொல்கிறது (முத்தேயு 7:54:57). அநேக வாலிபர்கள் வசனங்களை ஆர்வமாகக் கேட்கிறார்கள். ஆனால், விசுவாசித்து இரட்சிக்கப்படாதபடிக்கு பிசாசானவன் வந்து அவ்வசனத்தை அவர்கள் இருதயத்திலிருந்து எடுத்துப் போடுகிறான். வேத வார்த்தைகளை நாம் கேட்பது மாத்திரம் போதுமானதல்ல, அதன்படி செய்கிறவர்களாகவும் இருக்க வேண்டும் என தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார். கிறிஸ்துவின் சுவிசேஷமானது வசனத்தை கேட்கிறவர்களையும், அதற்குக் கீழ்ப்படிகிறவர்களையுமே ஆசிர்வதிக்கிறது (எபிரெயர் 5:89).

**III புத்திமான் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக் கொள்ளுகிறான்:**

ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக் கொள்ளுகிறவன் ஞானமுள்ளவான் என்று (நீதிமொழிகள் 11:30)ல் வாசிக்கிறோம். உலகத்தின் பார்வையில் யார் அதிகமாகப் பொருள்களை ஆதாயப்படுத்துகிறார்களோ அவர்கள் தான் பிழைக்கத் தெரிந்தவர்கள், புத்திசாலிகள் என்று கருதப்படுகிறார்கள். ஆனால், தேவன் உலகிலுள்ள எல்லாவற்றைப் பார்க்கிலும் விலையேறப்பெற்ற ஆத்துமாவை ஆதாயப்படுத்துகிறவர்கள் தான் ஞானமுள்ளவர்கள் என்கிறார். நாம் உலகத்தின் பார்வையில் புத்திசாலிகள் என்றழைக்கப்பட விரும்புகிறோமா? பதில் நம்முடைய கையில் தான் இருக்கிறது. பிரியமானவர்களே, இதுகாறும் நாம் தேவனுடைய பார்வையில் புத்திசாலியாகப் பார்க்கப்படுகிறவனுடைய பண்புகளைப் பார்த்தோம், அப்பண்புகளை நாம் நம் ஆவிக்குரிய கிறிஸ்தவ ஜீவியத்தில் மேம்படுத்தி ஞானவான்களாக இவ்வுலகில் வாழ்வோம். தேவன் தாமே அதற்கு உதவி செய்வாராக! ஆமென்! ★

சிறுவர் பகுதி

# பகிர்ந்து கொள்ளுதல் என்ற நற்பண்பு

Bro. ஏபில் நாயகம்

**பி**ரியமான சிறு பிள்ளைகளே! உங்கள் யாவருக்கும் இயேசுவின் இன்ப நாமத்தில் வாழ்த்துக்கள். கோடை விடுமுறையில் மகிழ்ச்சியாக இருப்பீர்கள் என நம்புகிறேன். குழந்தைகளே! தேவனுடைய பிள்ளைகளாகிய உங்களுக்கு நற்பண்புகள் நிச்சயம் இருக்க வேண்டும். நல்ல பண்புகளோடு இருந்தால் தான் நாம் நல்ல கிறிஸ்தவர்களாக வளர முடியும்.

ஆகவே இம்மாதம், **பகிர்ந்து கொள்ளுதல்** என்ற நற்பண்பைப் பற்றி பார்க்கவிருக்கிறோம். **பகிர்வது என்றால் நம்மிடம் இருப்பதை பிறருக்கும் கொடுத்தல்** என்று அர்த்தம். இயேசு இந்தப் பூமியில் வாழ்ந்த நாட்களில் ஒரு முறை சிறுவனுடய உதவியோடு ஒரு காரியத்தை செய்தார். ஆம், உங்களைப் போல் அவனும் ஒரு சிறுவன்தான்.

இயேசுவுக்குப் பின்னாக ஒரு பெரிய ஜனக்கூட்டம் அவருடைய உபதேசங்களை கேட்பதற்குத் திரண்டு வந்தது. அப்பொழுது இயேசு ஜனங்கள் பசியிலிருக்கிறார்கள் என்று அறிந்து சாப்பிடுவதற்கு ஏதாகிலும் உண்டா என்று தன் சீஷர்களிடத்தில் கேட்டார். அச்சமயத்தில் ஒரு சிறு பையனிடத்தில் **ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும்** இருந்தன. இயேசு அந்த ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் வாங்கி ஜெபித்து அற்புதம் செய்து ஐயாயிரத்திற்கும் அதிகமானோர் சாப்பிட்டு திருப்தியாகும்படி செய்தார். இயேசு செய்த அநேக அற்புதங்களில் இதுவும் ஒன்று.

பிள்ளைகளே! அச்சிறுவனைப் பற்றி ஒரு நிமிடம் சிந்தியுங்கள். அந்தப் பையன் தன்னிடம் இருந்த உணவை பிறரோடு பகிர்ந்து கொள்ள மனமுடையவனாயிருந்தான். தன்னிடத்தில் உள்ளதைத் தனக்கு மட்டுமே என்று அவன் நினைக்கவில்லை. அவன் தன் உணவை பகிர்ந்துகொள்ள முன்வந்ததால், அவன் மூலம் ஐயாயிரத்திற்கும் அதிகமானோர் சாப்பிட்டுத் திருப்தி அடைந்தார்கள்.

குழந்தைகளே! உங்களுடையதைப் பிறரோடு பகிர்ந்து கொள்ளும் நல்ல பழக்கம் இருக்கிறதா? பள்ளிகளில், நண்பர்கள் மத்தியில், ஞாயிறு பள்ளிகளில், உங்களிடம் இருப்பதைப் பகிர்ந்து கொடுத்து உதவுவீர்களா? ஆம், பகிர்தலும் ஒரு வகை உதவிதான். தன் உணவைப் பகிர்ந்து கொடுத்த சிறுவன் மூலமாக திரளான ஜனங்கள் பயனடைந்தார்கள். அதினிமித்தம் இன்றளவும்அவன் பேசப்படுகிறான்.

நீங்களும் பகிர்ந்து கொடுக்கும் குணத்தைப் பெற்றுக் கொண்டால் தேவன் உங்களையும் அநேகருக்குப் பயனுள்ளவர்களாக வைப்பார். தேவன் உங்களையும் ஆசீர்வதிப்பார். ★

# வேத வினா போட்டி

பதிலளிப்போர் கவனத்திற்கு

**கீழ்க்கண்ட கேள்விகளுக்கு வேதவசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் அடுத்த மாதம் 10 ம் தேதிக்குள் திருமறை ஆசான் முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் அலைபேசி எண்ணையும் தவறாமல் எழுதி அனுப்பவும். (இதற்கான விடை மே மாத இதழில்)**

## (உபாகமத்தில் தேடிக் கண்டுபிடியுங்கள்)

1. வணங்கா கழுத்துள்ள ஜனம் என்று தேவன் ஏன் சொன்னார்?
2. இஸ்ரவேலர் சகல ஜனங்களைப் பார்க்கிலும் எப்படியிருப்பார்கள்?
3. முந்தின பலகையை மோசே என்ன செய்தார்?
4. பிதாக்கள் எத்தனைபேரால் எகிப்துக்குப் போனார்கள்?
5. கர்த்தருடைய கையும், புயமும் எப்படிப்பட்டது?
6. எதை மாத்திரம் புசிக்கக்கூடாது?
7. எப்பொழுது விடுதலை பண்ண வேண்டும்?
8. நீ செய்யும் எல்லாவற்றிலும் உனக்கு கர்த்தர் என்ன செய்வார்?
9. வருஷத்தில் எத்தனை தரம் புளிப்பில்லா அப்பண்டிகை?
10. கர்த்தருடைய சந்நிதியில் எப்படி வரக்கூடாது ?

## மார்ச் மாத வினாக்களுக்கான விடைகள்

1. அதிகாரம் 34, (வசனங்கள்.959)
2. ஆயிரம் மடங்கு (1:11)
3. ஏசா (2:5)
4. சீகோன் (2:30)
5. ஆயிரம் தலைமுறைமட்டும் இரக்கம் (5:10)
6. எகிப்து (6:12)
7. ஏழு (7:1)
8. ரூபனியர் (4:42)
9. தேவன் பட்சிக்கிற அக்கினி,எரிச்சலுள்ள தேவன் (4:24)
10. பிஸ்கா (3:27)

## சரியான பதில் எழுதியவர்களில் சிலர்

| | |
|---|---|
| 1. N. இந்திரா ஜெபக்கனி | - தூத்துக்குடி |
| 2. M. செல்வம் | - கோவை |
| 3. R. பாக்கியம், ராஜேஷ் | - சென்னை |
| 4. S. சாந்தகுமாரி | - நாசரேத் |
| 5. N. ஜெபத்தாய் | - நாசரேத் |
| 6. செல்வமணி குணசேகரன் | - சென்னை |
| 7. S. ஜோதி சுரேஷ் | - திருச்சி |
| 8. A. பிலோமினா | - கோவை |
| 9. R. பாரதி | - கோபி |
| 10. K. ஜெயசிங் | - சென்னை |
| 11. K. இம்மானுவேல், ஈஸ்வரி | - பவானி |
| 12. J. ஜெமீலா செல்லையா | - நெல்லை |
| 13. S. ஜெயராஜ் | - கோவை |
| 14. ஜெயமணி ஜெயபாண்டியன் | - கடலூர் |
| 15. J. ஜான்சி | - ஆனைமலை |
| 16. மரகதம் திரவியம் | - தேனி |
| 17. G. சாமுவேல் மோகன்தாஸ் | - சென்னை |
| 18. V.C. ரூபவல்யா | - நாசரேத் |
| 19. T. சத்தியசீலன் | - கோவில் பட்டி |
| 20. G. பாக்கியம் சம்பூரணம் | - ஈரோடு |
| 21. J. மாலதி ஜெயக்குமார் | - மூலனூர் |
| 22. J. அபினேஷ் | - மூலனூர் |
| 23. K.S. மாணிக்கவாசகம் | - திருச்சி |
| 24. S. ஆதாள் | - கோவில்பட்டி |
| 25. V.S.S. பால்ராஜ் | - மதுரை |
| 26. மாலதி ஜெயசெல்வம் | - சீர்காழி |
| 27. சாந்தகுமாரி | - நாசரேத் |
| 28. ஜெனி | - கோவை |
| 29. ஜெயஷீலா | - காரைக்கால் |
| 30. தெபோராஜ் ஸ்டீபன் | - சேலம் |
| 31.அருள்ராஜ் | - சென்னை |

# வேதாகம கேள்வி - பதில்

**கேள்வி:** இயேசு ஞானஸ்நானம் பெற்றது ஏன்? பாவம் அவரிடம் படிந்து இருந்தால் அவை மன்னிக்கப்பட வேண்டும் என்பதற்காக பெற்றாரா?

**பதில் :** ஞானஸ்நானமானது பாவ மன்னிப்புக்கென்று வேதாகமம் விளக்குகிறது (அப்.2:38; 22:16) இயேசு இப்படியாய் இன்மொழி கூறுகிறார். ''விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்'' என்று (மாற்கு16:16). ஆதி திருச்சபையின் முதல் பிரசங்கத்தை முழங்கிய பேதுரு தனது முதல் நிரூபத்தில் ''அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது இப்பொழுது நம்மையும் இரட்சிக்கிறது'' என்கிறார் (பேதுரு 3:21).

வேதாகமம் இயேசுவை பற்றிக் கூறுகையில் **அவர் பாவம் அறியாதிருந்தார்** என்கிறது. மறுதலித்து பின்பு மனங்கசந்து அழுது மனந்திரும்பிய பேதுரு கூறுகையில் **அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை** என்கிறார் (பேதுரு2:22) எபிரெய எழுத்தாளர் **எல்லா விதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவராயிருந்தார்** என்கிறார் (எபி.4:15) பாவம் அவரிடம் காணப்பட்டதால் அது மன்னிக்கப்பட வேண்டும் என்பதற்காக திருமுழுக்குப் பெற்றிருந்தால், அவர் தேவனுடைய நியாயப் பிராமணத்தை மீறியிருக்கிறார். என்றுதானே அர்த்தமாகிறது(1யோவான் 3:4). ஆனால் இயேசு ''.....பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறேன்'' என்றார் (யோவான் 8:29) நமதாண்டவர் பாவஞ்செய்திருப்பார் என்றால் அவருக்கே இரட்சகர் தேவையாயிருக்கிறது. இரட்சகர் தேவைப்படுகின்ற ஒருவர் மற்றவர்களை இரட்சிக்கும் இரட்சகராக இருக்க முடியாது.

ஆனாலும், யோவானிடம் ஏன் ஞானஸ்நானம் பெற்றார் என்ற கேள்விக்கு இயேசுவே காரணத்தைத் தருகிறார். **எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது** என்றார். ''நிறைவேற்ற'' என்கிற வார்த்தைக்கு நிரப்புதல் அல்லது முழுமைப் படுத்துதல் என்று அர்த்தம். இதே வார்த்தையை மோசேயின் நியாயப் பிரமாணத்தை குறிப்பிட்டுப் பேசுகையில் அதை நிறைவேற்றவே வந்தேன் என்றார். இதினிமித்தம் இயேசு தம் ஞானஸ்நானத்தை பற்றி கூறுகையில், எல்லா நீதியையும் நிறைவேற்ற வந்தேன் (மத்.3:15) என்றும், பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறேன்'' என்றும் கூறினார் (யோவான் 8:29). ★

# நம்மை நாமே நிதானித்து அறிவோம்!

Bro. பாண்டியன்

**கி**றிஸ்துவுக்குள் பிரியமானவர்களுக்கு கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். பொதுவாக மனிதன் மற்றவரை எடை போடுவதில்தான், வல்லவர்களாய் இருக்கிறார்கள். அவர் பார்வையே சரியில்லை, பார்த்தால் நல்லவன் மாதிரி தெரியலையே என்பது போன்ற விமர்சனங்களை நாம் அடிக்கடி கேட்டிருக்கிறோம். மாறாக ஒரு கிறிஸ்தவனுக்கு வேதம் சொல்லும் ஆலோசனை என்னவெனில் ஒவ்வொருவரும் **தன்னைத்தானே சோதித்தறிய வேண்டும்** என்பதே! தேவனுடைய பிள்ளைகள் பிறருடைய குறைகளைப் பற்றி விமர்சிப்பதை கிறிஸ்து கண்டித்திருக்கிறார். வாரந்தோறும் நாம் அநுசரிக்கும் பந்தியில் **நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்(1கொரி. 11:31)** என்ற சிறிய வசனத்தில் பெரிய கருத்தைச் சொல்லியிருப்பதை இக்கட்டுரையில் பார்ப்போம்.

மலைப்பிரசங்கத்தில் இயேசு, **நீங்கள் குற்றவாளிகள் என்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவரைக் குற்றவாளிகள் என தீர்க்காதிருங்கள்; நீங்கள் அளிக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளிக்கப்படும்** என்று எச்சரித்திருப்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். நாம் மற்றவரின் குறைகளைப் பற்றி பேசும் போது நம் மாம்சம் உற்சாகமடைகிறது. அதுவே, நம்மைப்பற்றி பிறர் பேசும்போது மனம் உடைந்து போகிறது. அப்படி நாம் சோர்ந்து போகாமல் இருக்கும்படிக்கே கிறிஸ்துவின் போதனையும், அப். உபதேசமும் நம்மை வழி நடத்துகிறது(2கொரி. 13:5ல் பவுல் அப்போஸ்தலர் கூறும் போது, **நீங்கள் விசுவாசமுள்ளவர்களோ என்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள். உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள். கிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறார் என்று உங்களை நீங்களே அறியீர்களா?** என்று கேட்கிறார். நன்றாகக் கவனியுங்கள் இந்த ஒரே வசனத்தில் **உங்களை நீங்களே** என்ற பதம் மூன்றுமுறை வருகிறது! அதன் அர்த்தம் கிறிஸ்துவின் சபையில் இருக்கும் நீங்கள் மற்றவர்களை விமர்சிப்பதைவிட்டு உங்களேயே நீங்கள் சோதித்து, பரீட்சித்துப் பாருங்கள் என்று எச்சரிக்கிறது. ஏனெனில், நியாயத்தீர்ப்பு நாளில் மற்றவர் என்ன செய்தார் என்பதற்கு நாம் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. அது உலகக் கோர்ட்டுக்குத்தான் பொருந்தும். தேவ சமூகத்தில் அவனவன் தன் தன் கணக்கேயே ஒப்புவிக்க வேண்டும்.

இஸ்ரவேல் ஜனம் தேவனை மறந்ததால் அந்நிய தேசத்திற்கு அடிமைப்பட்டு போகும் தண்டனை பெற்றது. அதற்கு வருத்தப்பட்ட ஜனங்களைப் பார்த்து எரேமியா, **மனுஷன் தன் பாவத்துக்கு வரும் தண்டனைக் குறித்து முறையிடுவது என்ன? நாம் நம்முடைய வழிகளை சோதித்து ஆராய்ந்து, கர்த்தரிடத்திர் திரும்பக்கடவோம்** என்று புலம்புகிறார் (புலம் 3:39,40). ஆகவே, நாம் நம் வழிகளைச் சரிப்படுத்தாமல் தேவனுடைய உதவியை எதிர்பார்ப்பது வீணான காரியம். தன் வழியை சரிப்படுத்தாமல் பிறரை பழிப்பவனை கிறிஸ்து **மாயக்காரன்** என்கிறார். முன்பு உன் கண்ணில் இருக்கும் உத்திரத்தை பாராமல் உன் சகோதரன் கண்ணில் இருக்கும் துரும்பை எடுத்துப்போட துடிக்காதே என்று இடித்துரைக்கின்றார். எனக்கன்பான சகோதர, சகோதரியே நாம் **மாயக்காரன்** என்று கிறிஸ்துவிடம் வாங்காதிருப்போமாக. அதற்காகத்தான் நாம் நம்மை நிதானித்து அறிய வேண்டியவர்களாய் இருக்கிறோம். எப்படி வகுப்பில் Test, Exam என்ற இரண்டு வித பரீட்சைகள் இருக்கிறதோ அதைப்போல, வாரந்தோறும் நாம் அப்பம்பிட்கும்படி கூடிவரும் போது **எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து இதில் பங்கு பெற வேண்டும்** (1கொரி. 11:28) என்பது Test-ஐ போல நாம் நம்மை பரிசோதித்து ஆயத்தமாவது! ஆனால், Exam என்பது நாம் விசுவாசத்தை விட்டு விழுந்து போகுமளவுக்கு, சந்திக்கும் பெரிய விஷயங்களைக் குறிக்கிறது. உதாரணமாக **தேமா** என்பவன் இந்த உலகத்தின் மீது ஆசைவைத்து விசுவாசத்தை விட்டுப்பிரிந்து போனது. இன்னும் சிலர் பாடுகள், துன்பங்களில் சேர்ந்து கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து செல்கின்றனர்.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, நாம் நம்மை சோதித்து, பரீட்சித்து பார்க்கும் போது மட்டுமே கிறிஸ்துவுக்குள் வளர முடியும். அநேகர் தங்கள் தவறுக்கு வருந்தி மன்னிப்புக் கேட்பது என்பது கௌரவக் குறைச்சலாகக் கருதுகிறார்கள். ஆனால், சபை வாழ்க்கையில் நாம் வாரந்தோறும் நம்மையே சோதித்து தேவனோடும், மனிதனோடும் ஒப்புரவாக வேண்டும். தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் Project–களில் இதுவும் ஒரு முக்கியமான ஒன்றாகும் இதில் வெற்றியோடு முடிக்காவிட்டால் Final–ல் (நியாயதீர்ப்பு) நாம் தேறுவது கடினம்! ஒப்புரவாகுதல் எவ்வளவு முக்கியம் என்று ஆண்டவர் சொல்லியிருப்பதை கவனியுங்கள். ஒருவன் காணிக்கை செலுத்த ஆலயம் வரும்போது உன் பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவு கூருவாயாகில் – காணிக்கையை பலிபீடத்தண்டை வைத்து விட்டு முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி பின்பு வந்து காணிக்கை செலுத்து என்றார்.

இக்காரியம் பிறருடன் மாத்திரமல்ல, குடும்பத்திலுள்ளவர்கள் மற்றும் முக்கியமாக கணவன், மனைவிக்கும் பொருந்தும். சூரியன் அஸ்தமிக்கிறதற்குள் உன் கோபம் தணியக்கடவது என்ற அப்.உபதேசத்தை இந்த இடத்தில் நினைவு கூருகிறோம்.

நம் இருதயத்தில் கசப்பும், கோபமும் இருக்குமானால் தேவனை ஆராதிப்பது வீணாகும். மனுஷன் முகத்தைப் பார்க்கிறான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறவர் அல்லவா? முதலாவது நம் இருதயம் நம்மைக் குற்றவாளியாகத் தீர்க்க இடம் கொடுக்காதிருங்கள்(I யோவா. 3:20). அதை அசட்டை செய்தால் மனசாட்சியில் சூடுண்டு விசுவாசத்தை விட்டு விலகும் அபாயம் உண்டு(1தீமோ. 4:1). அவிசுவாசத்தினாலும், கீழ்படியாமையினாலும் இஸ்ரவேலர் கானான் தேசத்தை இழந்தனர். அதுபோல, நாம் ஆகாதபடி நம் குறைகளையும், பாவங்களையும், நாம் நிதானித்து, சரி செய்து, விலகி நம்மைக் காத்துக் கொள்ள வேண்டும். நீங்கள் பரிசுத்தமாய் வாழ்வதற்கும், மற்றவர்களோடே சமாதானமாய் இருப்பதற்கும் ஏதாகிலும் சம்மந்தம் இருக்கிறதா? என்றால் நிச்சயமாக இருக்கிறது என்கிறது வேதம். **யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாய் இருக்கவும் நாடுங்கள். பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரை தரிசிப்பதில்லையே** (எபி. 12:14). அதையே நம் ஆண்டவர் **இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத்தரிசிப்பார்கள்** என்கிறார். உங்கள் இருதயம் சுத்தமாயிருந்தால் தான் யாவரோடும் நீங்கள் சமாதானமாய் இருக்க முடியும்! நம் இருதயம் எப்படி அசுத்தமாகிறது? என்று யாக்கோபு(3:14) சொல்கிறார். கசப்பான வைராக்கியம், விரோதம் போன்றவையே நம் இருதயத்தை அசுத்தப்படுத்தி விடுகிறது! ஆனால், உலகம் இப்படிப்பட்டவர்களையே சூடு, சுரனை உள்ளவர்கள் என்று மேன்மை பாராட்டும்.

தன் மேல் அடிக்கடி பெய்கிற மழையைக் குடித்து, ஏற்ற பயிரை முளைப்பிக்கும் நிலமே ஆசீர்வதிக்கப்படும். வாரந்தோறும் நம் மீது சபையில் உபதேச மழை பெய்து கொண்டிருக்கிறது. நாம் நம்மை சோதித்து, ஆராய்ந்து பார்த்து, ஆகாத காரியங்களை விலக்கி, ஏற்ற கனிகளை, பயிரை முளைப்பிக்கிற நிலமாக, ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக மாறுவோமாக. மாறாக, ஏற்ற பயிரை முளைப்பிக்காமல் முள் பூண்டுகளை(கசப்பு,வைராக்கியம்) விளைவிக்கும் நிலமானது சபிக்கப்பட்டதாய் இருக்கும். இப்போது சபையில் நாம் அப்.உபதேசத்தின் மீது மாளிகையாகக் கட்டப்பட்டு வளருகிறோம் – இயேசுவே மூலைக்கல் லாக இருக்கிறார். நம்மை நாமே நிதானித்து அறிந்து நியாயத்தீர்ப்பில் ஆசீர்வாதம் பெறுவோம். தேவ ஆசீர் உங்களோடே இருப்பதாக. ஆமென்! ★

# ஒன்றான மெய்த்தேவன்

Bro. ஆறுமுகம்

சென்ற இதழ் தொடர்ச்சி

## 3. தேவத்துவம்

**தே**வத்துவம் எனும் வார்த்தை வேதாகமத்தில் மூன்று வசனப்பகுதிகளில் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. அவை 1. ரோமர் 1:20, அப். 17:29, கொலோசெயர் 2:9. மூலமொழியால் எழுதப்பட்ட திருமறையில் :

1. அப்போஸ்தலர்கள் 17:29 – ''தியோட்டெஸ்'' (Theotes) என்றும்
2. ரோமர் 1:20 – ''தியோட்டெஸ்'' (Theotes) என்றும்
3. கொலோசெயர் 2:9 – ''தியோஸ்'' (Theos) என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் பொருள் ஒன்றுக்கொன்று அதிக வித்தியாசமில்லாமல் தேவனுடைய தெய்வீகத் தன்மையைக் குறிப்பவை. தமிழில் **தண்ணீர்** என்றாலும், **நீர்** என்றாலும், சமஸ்கிருத வார்த்தையான **ஜலம்** என்றாலும் எப்படி அதன் தன்மையில் ஒரே பொருளைக் குறிப்பிடுகிறதோ அதுபோலவே தேவத்துவ தன்மை வெவ்வேறு கிரேக்க வார்த்தைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவைகள் கடவு தன்மை அல்லது தேவனுடைய குணாதிசயம் (தேவத்தன்மை அல்லது தெய்வீகத்தன்மை) என்று ஜீவனுள்ள தேவனுடைய தன்மையைக் குறிப்பிடுகிறது.

**1. அப்போஸ்தலர் 17:29:** ''**தெய்வம்**'' (Theotes)

அப்போஸ்தலர் 17–ல் முழுவதும் விக்கிரகத் தோப்புகளாலும் கோயில்களாலும் நிறைந்திருந்த பட்டணத்தாருக்கு பவுல் **அறியப்படாத தேவனை** பிரசங்கிக்கிறார். வசனங்கள் 24–2ல் தேனுடைய நபர்த் தத்துவத்தை வெளிப்படுத்துகிறார். கிரேக்க மொழிச் சொல் அகராதியில் எண் 2306–ன் பொருள் விளக்கம் இது. இந்த வார்த்தை **தேவன்** (God) **தெய்வம் தெய்வீகம் தெய்வீகத்தன்மை** என்றெல்லாம் விளக்கப்படுத்தப்படுகிறது. மெய்யான தேவன் வானத்தையும் பூமியையும் உண்டாக்கினவர் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் வாசம் பண்ணுவதில்லை. மனுஷருடைய கைகளினால் பணிவிடை கொள்ளுகிறதுமில்லை. அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்ல. நாம் அவருடைய சந்ததியார் என்று புலவர்களிடமும் சிலர் சொல்லியிருக்கிறார்கள் என்றெல்லாம் தேவனுடைய நபர்த்துவத்தை குறிப்பிடும்

பவுல், வசனம் 29 –ல் அவருடைய தெய்வீகத் தன்மை மனுஷருடைய சித்திர வேலைகளினாலும் யுக்தியினாலும் உருவாக்கின பொன், வெள்ளி, கல் இவைகளுக்கு ஒப்பானது என்று நினைக்கலாகாது என்று சொன்னார்.

இங்கே குறிப்பிடப்படும் **தெய்வம்** எனும் பதம் ஆங்கிலத்தில் தேவத்துவம் என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. கிரேக்க மொழி பொருள் விளக்க எண் 2304–ம் இதை உறுதிப் படுத்துகிறது. அதாவது, உண்மையான தேவத்துவம் அல்லது தெய்வீகத்தன்மைக்கு விக்கிரக தெய்வங்கள் ஒப்பானவைகள் அல்ல. மனுஷர்களாகிய நாம் இந்த மெய்த் தேவனைப் போன்றே பார்க்கிறோம், கேட்கிறோம், பேசுகிறோம். விக்கிரகங்களுக்கு இவையிருந்தும் செயல்படுவதில்லை. எனவே மெய்யான தேவத்துவத்திற்கு **தெய்வீகத்திற்கு** விக்கிரகங்கள் ஒப்பாவதில்லை என்பது பவுலின் போதனை.

மேலும், அப்போஸ்தலர் 17:29–ல் பேசப்படும் **தெய்வம்** எனும் பதம் எரேமியா 10:10–ல் விளக்கமளிக்கிறது. **கர்த்தரோ மெய்யான தெய்வம்; அவர் ஜீவனுள்ளவர்; நித்திய ராஜா;** என்று சொல்லப்படுகிறது. ஆதியாகமம் 1:1–ல் குறிப்பிடப்படுகிற ''தேவன்'' என்பது பன்மைச் சொல்லாகிய **ஏலோஹிம்** [எபி.எண்430] என்று பொருள் விளக்கம் அளிப்பது போலவே, எரேமியா 10:10க்கும் பொருள் விளக்க எண் 430 கொடுக்கப்பட்டுள்ளது. இது எண் 433–ல் சொல்லப்படும் ஒருமையைக் குறிப்பதில்லை. இதன் எபிரேய வார்த்தை **ஏலோவா**

**2. ரோமர் 1:20–ல் பேசப்படும் ''தேவத்துவம்''**

எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கபட்டி ருக்கிறவைகளினாவே, உலகம் உண்டானது முதற்கொண்டு தெளிவாய்க் காணப்படும்; ஆதலால் அவர்கள் போக்குச் சொல்ல இடமில்லை.

இங்கே **தேவத்துவம்** என்பதற்கு கிரேக்கப்பதம் **தியீடெஸ்** (Theites) என்று சொல்லப்பட்டுள்ளது. [கிரேக்கச் சொல் எண் 2305]. ஆனால், இதுவும் வேறே புது அர்த்தத்தைப் போதிப்பதில்லை. இதுவும் **கடவுள்தன்மை** அல்லது **இறைத்தன்மை** எனும் பொருளைத்தான் கொடுக்கிறது. அதன் நேரடிப் பொருளில் சொன்னால், **ஐந்து புலன்களுக்கு அப்பாற்பட்ட தன்மை; ஐந்து புலன்களால் உணர இயலாத தன்மை** என்றெல்லாம் பொருள்படுகிறது. எனவே அப்போஸ்தலர் 17:29 லிருந்து பெரிய வித்தியாசத்தை இது காட்டுவதில்லை. தனித்துவக் கொள்கைக்காரர்களின் கருத்துப்படியான விக்கிரக தேவர்களை இவ்வசனம் பேசுவதில்லை. இதுவும் தனிக் குணப் பண்பைக் குறிக்கும் (divinity) பதமே.

– தொடர்ச்சி அடுத்த இதழில் ★

# அவன் மேல் என் ஆத்துமா பிரியமாயிராது

Bro. K.M. பிலிப்

**பி**ரியமானவர்களே! உங்கள் ஆத்தும இரட்சிப்பு ஈடேற பிரயாசப்பட்டுக் கொண்டிருக்கிற (எபி.10:39) யாவருக்கும் ஆத்ம நேசர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாகிய இயேசுவை நோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓட தேவன் தாமே உதவி செய்வாராக (எபி.12:1).

இக்கட்டுரையின் வாயிலாக தேவன், பின்வாங்கிப் போவானானால் அவன் மேல் என் ஆத்துமா பிரியமாயிராது (எபி.10:38) என்று இம்மட்டும் சபையில் நிலைநிற்கும் விசுவாசிகளை எச்சரிக்கிறார். இதில் ஏற்கனவே சபையை விட்டுப் பின்வாங்கிப் போன அவிசுவாசிகளும் கூட எச்சரிப்பைப் பெற்று மனந்திரும்பி தேவனுடைய பிரியத்தைப் பெற்றுக்கொள்ள தேவன் வாய்ப்புத் தருகிறார். தேவ எச்சரிப்பு, எப்படி, யார்மூலம் கிடைத்தாலும் நாம் விழித்துக் கொள்ள வேண்டும். ‘‘விசுவாசத்தினாலே நோவா.... தேவ எச்சரிப்பைப் பெற்று பயபக்தி உள்ளவனாகி (எபி.11:7) ‘தேவன் தனக்கு கட்டளையிட்ட படியெல்லாம் செய்து (ஆதி. 6:23) தன்னை மட்டுமில்லாமல் தன் குடும்பத்தையே இரட்சித்துக் கொண்டான். யோனா மூலம் எச்சரிப்பைப் பெற்ற நினிவே பட்டணத்து ராஜா முதல் மக்கள் அனைவரும் தங்களைத் தாழ்த்தி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டு மனந் திரும்பி தேவ இரக்கத்தையும் பிரியத்தையும் பெற்றதால் பட்டணம் அழிக்கப்படாமல் காக்கப்பட்டது (யோனா:3). ஆம், **ஜாக்கிரதை உள்ளவர்களுடைய ஆத்துமாவோ புஷ்டியாகும்** (நீதி.13:4).

எனவே, தேவ எச்சரிப்பை பயபக்தியோடு உற்று நோக்குவோம். இதில் இரண்டு எச்சரிக்கைகளை தேவன் கொடுக்கிறார்.

1. விசுவாசி பின்வாங்கக் கூடாது.
2. விசுவாசி தேவனுடைய பிரியத்தை இழந்துவிடக் கூடாது.

இதில் இரண்டாவது எச்சரிப்பை முதலாவது கவனிப்போம்.

I. **விசுவாசிகள் தேவனுடைய பிரியத்தை இழந்துவிடக் கூடாது.**

தேவன் ஆதிமுதல் இன்று வரை மனித இனத்தின் மீது பிரியமுள்ளவராகவே இருக்கிறார். உலகைப் படைத்த தேவன் எல்லாவற்றையும் படைத்த பிறகே மனிதனைப் படைத்த

காரணத்தை உற்றுக் கவனித்தால், மனிதன் கண் விழிக்கும்போது அவனுக்கு முன் எல்லாம் நல்லவைகளாக, திருப்தியாக, குறைவின்றி இருக்க வேண்டும். அவன் எப்பொழுதும் மகிழ்ச்சியாய் வாழ வேண்டும். தன்னோடு உறவாடிக் கொண்டிருக்க வேண்டும் என்ற தேவ அன்பும் பிரியமும் தெளிவாய் வெளிப்படும். ஆனால், தேவனுடைய பிரியத்தைச் சீர்குலைக்க எதிராளியான பிசாசானவன் ஆதாம் ஏவாளை வகைதேடிச் சுற்றி சுற்றி வந்தான். ஏவாளின் தனிமையை தனக்குச் சாதகமாக்கி வஞ்சக வலையை விரித்தான். சிக்கிக்கொண்ட இருவரும் விழுந்து போனார்கள்; சாபத்திற்கு உள்ளானார்கள்; ஏதேனின் செழிப்பான, பயமற்ற திருப்தியான வாழ்க்கையை இழந்து போனார்கள். தேவ பிரியத்தையும் இழந்து, தேவனை விட்டே பிரிக்கப்பட்டார்கள். ஆனாலும் மனிதன் மீது மாறாத பிரியமுள்ள தேவன் மீண்டும் அவனைத் தன்னோடு இணைத்துக்கொள்ள தன் குமாரன் கிறிஸ்துவையே நம் பாவங்களை நிவர்த்தி செய்யும் கிருபாதார பலியாக ஒப்புக் கொடுத்தார். (யோவான் 4:16). இந்த தியாகத்தின் வழியாக மீண்டும் நம்மை அவருடைய பிள்ளைகளாக அணைத்துக் கொண்டார். (யோவான் 1:12). மறுபடியும் நாம் பின்வாங்கிப் போகாதபடி தன் குமாரனின் சுய ரத்தத்தினால் சம்பாதித்த சபைக்குள் அடைக்கலப்படுத்தி கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருக்கும் வாய்ப்பையும் கொடுத்திருக்கிறார். இம்மையில் மட்டுமில்லாமல் மறுமையிலும் தேவனோடு நித்திய மகிழ்ச்சியாய் வாழ நம்மை அழைத்துச் செல்ல ஏற்ற வேளையில் தன் குமாரனையே மீண்டும் அனுப்பப்போகிறார் (தெச. 4:16,17).

அன்பானவர்களே, மனித இனத்தின்மீது தேவன் வைத்திருக்கிற மாபெரும் பிரியத்தை இழப்பதென்பது எவ்வளவு மதியீனம் என்று சற்று நின்று நிதானித்துப் பாருங்கள். நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து கொண்டு (எபே.4:1) பிசாசுக்கு இடம் கொடாமலும் இருந்து (5:27) பின்னிட்டுப் பாராமல் தேவனுடைய பிரியத்தால் வரும் ஆசீர்வாதத்தைப் பெற்று மகிழுங்கள். ஆகவேதான், பிரியமானவர்களே! உன் ஆத்துமா வாழ்வதுபோல் நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிரு என்று தேவன் உங்களை வாழ்த்துகிறார் (யோவான் 3:2) கிறிஸ்துவுக்குள் வாழ்ந்து சுகித்திருங்கள்.

**II. இப்பொழுது முதல் எச்சரிக்கையை கவனிப்போம் விசுவாசி பின் வாங்கக் கூடாது**

அதாவது ஒரு விசுவாசி தன்விசுவாசத்தை விட்டு மறுதலிக்கவோ விழுந்து போகவோ கூடாது. நல்ல ஆரோக்கியமாயிருந்த ஒருவரது உடலில் பெலவீனம் ஏற்படுகிறதென்றால், ஆரம்ப நிலையிலேயே தகுதி வாய்ந்த மருத்துவரைச் சந்தித்து பரிசோதித்து மருத்துவர் தரும் ஆலோசனையின்படி சிகிச்சை பெற்று அதிகக் கேடு வருமுன்

நல்ல ஆரோக்கியத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அப்படியே சகோதரரே ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு எச்சரிக்கையாய் இருங்கள். [எபி:3:12]. அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப் போனவனாகக் காணப்படாதபடிக்கு பயந்திருக்கக்கடவோம் [எபி:4:1]. எனவே, பின்வாங்கிப் போவதற்கான காரண காரியங்களைக் கவனமாய் ஆராய்ந்து பார்ப்பபோம்.

**அ: ஒரு காரணம் பின்னானவைகளை மறந்து விடு [பிலி.3:13]**

சோதோம் கொமோராவின் பாவம் மிகவும் கொடியதாயிருந்ததால் அதை அக்கினியால் அழிக்க தேவன் முடிவெடுத்தார். ஆனாலும், அங்கே நீதிமானாய் வாழ்ந்த லோத்துவைத் தப்புவிக்க தேவன் தேவதூதர்களை அனுப்பி லோத்தையும் அவன் மனைவி, பிள்ளைகளையும் பட்டணத்துக்கு வெளியே இழுத்து வந்து உன் ஜீவன் தப்ப ஓடிப்போ பின்னிட்டுப் பாராதே என்ற கட்டளையைக் கொடுத்தார். அக்கினி, சோதேம் கொமேராவை அழித்த போதோ, லோத்துவின் மனைவி பின்னிட்டுப் பார்த்து உப்புத்தூண் ஆனாள் என்ற ஒரு பரிதாபமான சரித்திரத்தை ஆதி:19:1 –26–ல் பார்க்கிறோம். லோத்தின் மனைவி வாய்ப்புக் கிடைத்தும் எச்சரிக்கை உணர்வு இல்லாததால் பின்னோக்கிப் பார்த்து வாழ்க்கையை இழந்து போனாள்.

தேவ பிள்ளையே நம்மை, பின்னோக்கி இழுக்கும் உலக இச்சை, மாம்ச இச்சை போன்ற பின்னானவைகளை மறந்து வாழ்வளிக்கும் தேவ கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நம்மை ஒப்புக் கொடுப்போம். பின்னானவைகளை மறந்து முன்னோக்கிச் செல்வோம்.

மோசே மூலம் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்ட இஸ்ரவேலர்கள் தேவனின் அற்புதமான நிறைவான வழிநடத்துதலை எல்லாம் மறந்து அவ்வப்பொழுது எகிப்தின் பின்னானவைகளை மறக்காமல் தங்கள் எண்ணத்தில் மிதக்க விட்டதால் [யாத்.14:11,12[16:13] காலேப், யோசுவா தவிர 6லட்சம் புருஷர்களும் வனாந்திரத்திலேயே மரித்துக் கானானை இழந்துபோனார்கள். அன்பானவர்களே, உங்கள் விசுவாச வாழ்க்கைக்கு முன் இருந்த பாரமான பாவமான யாவற்றையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு [எபி.12:1] முன்னானவைகளை நாடி கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தையப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருங்கள் [பிலி. 3:14]

## ஆ. நீங்கள் சும்மா இருந்தால் இடறி பின்வாங்கிப் போவீர்கள்

தேவனுடைய பிள்ளைகள் தேவன் நமக்குக் கொடுத்த பொறுப்புகளை நிறைவேற்றுவதில் எப்பொழுதும் கவனமுள்ளவர்களாய் இருக்க வேண்டும். ஏனெனில், சோம்பேறியினுடைய ஆத்துமா விரும்பியும் ஒன்றும் பெறாது (நீதி.13:4). தாவீதின் வாழ்க்கையில் மிகப்பெரிய கரும்புள்ளியை ஏற்படுத்திய வரலாற்றை சாமு :11-ஆம் அதிகாரத்தில் காண்கிறோம். பின்னுக்குத் தள்ளி மறந்து விட்ட பாவமான கண்களின் இச்சைக்கு இடம் கொடுத்து, பொய், வஞ்சனை, தந்திரம் கடைசியில் கொலை என்கிற அளவில் தாவீதை படுகுழிக்குள் தள்ளியது சோம்பல்தான். இராஜாக்கள் யுத்தத்திற்கு புறப்படும் காலம் வந்தபோது..... யோவாபையும் சேனைகளையும் போருக்கு அனுப்பிவிட்டு தாவீதோ எருசலேமில் இருந்து விட்டான். படுக்கையில் விழுந்து கிடந்தான். (II சாமு 11:2). சோம்பலுக்கு இடம் கொடுத்து தன் பொறுப்பை தட்டிக் கழித்ததால் தாவீது தேவ கோபத்திற்கு ஆளானான். சோம்பேறியின் வயல் முள்ளுக்காடாய் இருந்தது என்றே (நீதி.24:10,11) ஞானியின் வார்த்தை எவ்வளவு சரியாய் இருக்கிறது என்பதை உணர்ந்து பாருங்கள். பரிசுத்த வாழ்க்கையில் நாம் உற்சாகமாய் தொடர்ந்து முன்னோக்கிச் செல்ல செய்ய வேண்டிய நல்ல காரியங்களை (பேதுரு 1:5-10) பகுதியை தயவு செய்து வாசித்து விசுவாசித்து செயல்படுங்கள். உங்களைப் பின்வாங்கிப் போகச் செய்கின்ற சோம்பலுக்கு ஒரு போதும் இடம் கொடுக்காதீர்கள்.

## இ. பின்வாங்கிப் போவதற்கான மற்றொரு காரணம் - பயம்

**வா** என்று அழைத்தவுடன் எல்லாவற்றையும் விட்டு தைரியமாய் இயேசுவை பின் தொடர்ந்தவன்தான் பேதுரு (மத். 5:19) **வா** என்று இயேசுவிடமிருந்து கட்டளை கிடைத்தவுடன் விசுவாசத்தோடு சிறிதும் பயமின்றி உடனே படகைவிட்டு இறங்கிய பேதுரு, கடல் நீரின் மேல் நடந்தார். இவர் கடலில் நடக்கும் முன்பிருந்தே எதிர் காற்றும், புயலும், கொந்தளிக்கும் அலைகளும் இருந்து கொண்டேதான் இருந்தது. பேதுருவில் அலைகளின் மத்தியிலும் நீரின் மேல் நடக்க முடிந்தது. ஆனால் பேதுரு இயேசுவை மட்டும் நோக்கிப் பார்ப்பதை விட்டு தன் பார்வையைச் சற்று சூழ்நிலைக்குத் திருப்பியதால் **பயம்** கவ்விக் கொண்டது. ''பயம்'' அவரைக் கடலில் ஆழ்த்தியது. இன்னும் விசுவாசிகள் ஞானஸ்நானம் எடுத்த ஆரம்ப நிலையில் சபை கூடிவரும் வேகம், பாடல், வேதவாசிப்பு ஜெபம் ஆகியவற்றில் காட்டும் ஆர்வம் காணிக்கை கொடுப்பதிலுள்ள உற்சாகம் அவர்களது விசுவாச வாழ்க்கை குறித்து ஆச்சரியப்பட வைக்கும். ஆம் நீரின் மேல் நடப்பார்கள். காலப்போக்கில் சபையைப் பார்ப்பதை விட்டுச் சற்றுச் சூழலையே எப்பொழுதும் பார்த்து, பயந்து பின்வாங்கி காணாமல் போய்விடுவார்கள். அவர்களுடைய நிலையை (வெளி.21:8)-ல் பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும்...... இரண்டாம் மரணமாகிய அக்னியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்பதை ஆவியானவர் தெளிவாய் வெளிப்படுத்தியுள்ளார்.

அதே சமயம் தாங்கள் ஆராதிக்கிற தேவனைக் குறித்த அசைக்க முடியாத விசுவாசம் இருந்ததால், பயமின்றி இராஜாவுக்கு எதிராக சவால் விட்ட விசுவாசிகள் தான், **சாத்ராக்**, மேஷாக், ஆபேத்நேகா என்ற வாலிபர்கள் (தானி.3:16) இந்த காரியத்தைக் குறித்து உமக்கு உத்தரவு சொல்ல எங்களுக்கு அவசியமில்லைஎன்றார்கள். விசுவாசிகளாகிய இவர்களது பயமற்ற வாழ்க்கையைப் பாருங்கள். தேவன் அவர்களை அக்கினிக்கும், இராஜாவின் கைக்கும் தப்புவித்தார் என்பதே சரித்திரம்.

**ஈ. பின்வாங்கிப் போவதற்கான காரணங்களில் ஒன்று திருப்தியற்ற நிலை**

ஆதாம் ஏவாளை தேவன் மனிதர்களாய் இருப்பதற்காகவே படைத்தார். தேவையான சகலமும் கொடுத்தார். தேவன் கொடுத்த வாழ்க்கையில் திருப்தியடையாத அவர்கள், தாங்கள் தேவர்கள் ஆக வேண்டும் என்ற தேவையற்ற முடியாத ஒன்றின் மேல் தங்கள் இருதயத்தைச் சாய்த்ததால் கிடைத்த திருப்தியான வாழ்க்கையையும் இழந்து போனார்கள் (ஆதி. 1,2) தன் இனப்பெருமை பட்டம் படிப்பு பதவி எல்லாவற்றையும் குப்பை என்று தள்ளிவிட்டு விசுவாச வாழ்க்கை போதுமென்று வந்த மாபெரும் விசுவாசியின் திருப்தியான வாழ்க்கையை உங்கள் இருதயத்தைத் திறந்து ஆழ்ந்து கவனியுங்கள். **தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்; வாழ்ந்திருக்கவும் தெரியும்.** எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாய் இருக்கவும் நான் போதிக்கப்பட்டிருக்கிறேன். ஏனெனில், நான் எந்த நிலைமையில் இருந்தாலும் மன இரம்மியமாய் இருக்கக் கற்றுக் கொண்டேன். (4:1) என்றதோடு **போதுமென்கிற மனதோடு கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம்** (1தீமோ6:6) என்று மனதிருப்தியாய் வாழ்ந்த அனுபவ விசுவாசி பவுல் கூறுகிறார்.

தேவனுக்குப் பிரியமான விசுவாசிகளே பின்வாங்கிப் போகும் எண்ணத்தை அறவே அழித்துப் போடுங்கள். வழுவாதபடி உங்களைக் காக்கவும் தமது மகிமையுள்ள சன்னிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவரும் உங்கள் மேல் பிரியமுள்ளவருமான தேவன் தாமே வழிநடத்துவாராக...... (யூதா:26) ஆமென். ★

## நாளும் நடப்பும்

- மாணவர்கள் மாற்றுச் சான்றிதழ்களை எந்தப் பகுதியில் இருந்தும் இணையதளம் மூலமாகப் பெறலாம் – அமைச்சர்
- ரயில்களில் விற்கப்படும் உணவுகள் மீது 5% ஜிஎஸ்டி வரி – மத்திய நிதியமைச்சகம்
- சமூக நலத் திட்டங்களுடன் ஆதாரை இணைப்பதற்கான காலக் கெடு ஜீன் 30–ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. – உச்ச நீதிமன்றம்
- பிளஸ் 2 தேர்வு முடிவு மே 16–ல் வெளியாகும்.

நான் ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியம் பெற்றிருக்கிறேன் (எபே 2:16)

இருளின் அதிகாரத்தினின்று விடுதலையாக்கப்பட்டு அதன் பின் குமாரனுடைய ராஜ்ஜியத்திற்கு உட்படுத்தப்பட்டிருக்கிறேன் (கொலொ. 1:13)

நான் மீட்கப்பட்டிருக்கிறேன். என் பாவங்களெல்லாம் மன்னிக்கப்பட்டிருக்கிறது (கொலா 1:14)

கிறிஸ்து மகிமையின் நம்பிக்கைக்காக எனக்குள் இருக்கிறார் (கொலொ 1:27)

நான் ஆவிக்குரிய ரீதியில் விருத்தசேனம் பண்ணப்பட்டிருக்கிறேன். என்னுடைய பாவ சரீரம் களைந்து போடப்பட்டிருக்கிறது (கொலோ 2:11)

நான் கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டு எழுப்பப்பட்டு, கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பிக்கப்பட்டிருக்கிறேன் (கொலோ 2:12, 13).

நான் பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியைப் பெற்றிருக்கிறேன் (2 தீமோ 1:7)

நான் எனது ரீதியின் கிரியைகளின் படி இரட்சிக்கப்படாமல் அவருடைய இரக்கத்தின் படி இரட்சிக்கப்பட்டிருக்கிறேன் (தீத்து. 3:5)

நான் இரக்கத்தைப் பெறவும் கிருபையை அடையவும் தைரியமாய் கிருபாசனத்தண்டனை சேரும் உரிமை பெற்றிருக்கிறேன் (எபி. 4:16)

நான் திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவனாகும் படி மகா மேன்மையும், அருமையுமான அருமையுமான வாக்குத்தத்தங்கள் எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது ( பேது. 1:4).